REVENUE DEPARTMENT

Departmental Tests

Test Code No: 113

Name of the Test:- The Revenue Test - Part - II

Brief Notes On Revenue Subjects

K.P. PUGALENTHI., M.A., B.Ed.,
Tahsildar (Rtd).,
101, Govindammal Nagar,
Seelanaickenpatti
Salem - 636201.
Cell: 98654-22161.

REVENUE TESTS

Test Code No: 113 - The Revenue Test- Part-II		Page
	Syllabus	
1	Standing Orders of Board of Revenue – Volume – I	1
2	The Land Acquisition Act, 1894-Act No. of 1894	57
3	The Land Acquisition (Amendment) Act, 1984	–
4	The Land Acquisition High Ways Act, 2001	69
5	The Land Acquisition of Land for Industrial Purpose Act 1997	71
6	The Tamil Nadu Acquisition of Land for Harijan Welfare Schemes 1977 (Act 31/1978)	73
7	Tamil Nadu Act III of 1905 – Encroachments	75
8	Tamil Nadu Act V of 1882 – Forest	81
9	Tamil Nadu Act XXVI of 1948 – Tamil Nadu Estate (Abolition & Conversion into Ryotwari) Act	89
10	Tamil Nadu Land Utilisation Order 1957	93
11	Tamil Nadu Inam Estate (Abolition and Conversion into Ryotwari) Act 1963	95
12	Tamil Nadu Lease hold (Abolition and Conversion) Act, 1963	–
13	Tamil Nadu – Minor Inams	97
	Previous Years- Questions & Answers (Solved Papers	
i	Objective Type- Without Books	99
ii	Descriptive Type - With Books.	103

21	மனை அடமானம்		
22	அரசு நிலம், கட்டிடத்தை விற்பனை செய்தல்		
23	மத்திய அரசினர், மாநில அரசினர் இவர்களுக்குள் நிலங்களையும் கட்டிடங்களையும் மாற்றிக் கொள்ளுதல்		
23A	மாநில அரசின் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிலங்களை மாற்றல் செய்தல்.		
24	தனிப்பட்டவர், வாரியம் மற்றும் தல ஆட்சிக் கழகங்களுக்கு அரசு நிலத்தை விட்டுக்கொடுத்தல்.		
24A	அரசு நிலத்தையும், கட்டிடங்களையும் தற்காலிக உபயோகத்திற்குக் கொடுத்தல்.		
26	ஆக்கிரமிப்பு		
26A	அரசு நிலத்தை தனிப்பட்டவருக்குச் சொந்தமான நிலத்திற்குப் பதிலாக பரிவர்த்தனை செய்து கொள்ளுதல்.		
27	பட்டாக்கள் கொடுத்தல்.		
31	நில உடைமைப் பதிவை மாற்றுதல் (பட்டா மாறுதல்)		
33	அரசுக்குடி நிலங்களின் உரிமையை விட்டுவிடுதல் (Relinquishment)		

31. ஜமாபந்தி (வருவாய்த் தீர்வாயம்)

JAMABANDHI (R.S.O.12)

வருவாய்த் தீர்வாயம் பொதுவாக ஏப்ரல் மாதம் தொடங்கி ஜூன் மாதத்திற்குள் முடிவுறும். இதற்கான பிர்கா மற்றும் கிராம வாரியான நிகழ்ச்சி நிரல் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்று மாவட்ட அரசிதழில் விளம்பரப் படுத்தப்படும்.

துணை ஆட்சியர் நிலைக்குக் குறையாத அலுவலரால் வருவாய்த் தீர்வாயம் வட்டத் தலைமை இடத்தில் நடத்தப்படும். மக்கள் நலனை கருத்தில் கொண்டு தேவைப்பட்டால் பிர்கா தலைமை இடத்திலும் வருவாயத் தீர்வாயம் நடத்தலாம்.

1. அரசினருக்குச் சேர வேண்டிய நிலத் தீர்வை உட்பட்ட வருவாய் இனங்களெல்லாம் சரியாக நிர்ணயிக்கப்பட்டு கணக்குகளில் எழுதப் பெற்றுள்ளனவா என்பது ஆய்வு செய்யப்படுகிறது.

2. ஒவ்வொரு பட்டாதாரரும் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் வருவாய் கிராமத்திற்கான நிலவரி கேட்பு மொத்தம் எவ்வளவு எனத் தீர்மானித்து வருவாயத் தீர்வாய அலுவலரால் கிராமக் கணக்கு எண் 10(2) மற்றும் வட்டக் கணக்கு 12-ல் ஒப்புதல் செய்யப்படும். அவர் ஒப்புதல் செய்த தொகையானது அந்தக் கிராமத்தின் நடப்பு பசலி நிலவரிக் கேட்பாகும்.

3. ஆக்கிரமிப்பு தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய அபராதத் தொகைகள், 2C மரவரி, மரமேம்பலன் ஏலம் மற்றும் மீன்பாசி ஏலம் போன்ற அரசுக்கு வருவாய் வரும் இனங்களில் உரிய காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

4. பொருளாதார வளர்ச்சிக்கும் ஆட்சி முறைக்கும் வேண்டிய புள்ளி விவரங்கள் தக்க முறையில் தரப்படுகிறதா என்பது நிச்சயித்துக் கொள்ளப்படுகிறது.

5. கிராமப் பதிவேடுகளையும் தாலுகா பதிவேடுகளையும் வருவாய்த் தீர்வாய அலுவலரால் ஆய்வு செய்யப்படுகிறது.

6. பயிராய்வுப்பணி,ஆக்கிரமிப்புகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் நில ஒப்படைகள், உரிமை விட்டுவிடல், நிலங்களை மாற்றுவது, பணக் கணக்குகள் முடிவு செய்தல் முதலியவை. சம்மந்தப்பட்ட அலுவலர்களால் முறையாக செய்யப்பட்டனவா என ஆய்வு செய்யப்படுகிறது.

7. கிராம அளவிலான நில அளவைக் கருவிகளையும் படங்களையும் பதிவேடுகளையும் தணிக்கை செய்யப்படுகிறது.

8. வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களின் பணிகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

9. பட்டாதாரர்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்து அவற்றிற்கு நிவாரணம் தேடிக் கொள்ள வருவாயத் தீர்வாயம் உதவுகிறது.

10. அனைத்துத் துறை அலுவலர்களும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் கூடுவதால் பொதுமக்கள் குறைகள் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு உடனுக்குடன் பரிகாரம் தேடிக் கொள்ளப்படுகிறது.

11. வருவாய்த் தீர்வாயத்தின் மூலமாகக் கிடைக்கும் பல்வேறு பயன்களும் வேறு எந்த மாற்றுத் திட்டத்தாலும் கிடைக்காது.

(வருவாய் நிலை ஆணை எண்.12)

II. வருவாயத் தீர்வாய கணக்குகள் - சீரமைத்தல்:

தற்போதுள்ள வருடாந்திர ஜமாபந்தி முறை தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். திருத்திய வருவாயத் தீர்வாய சரிபார்த்தல் குறிப்பினை (Modified jamabandhi check memo) 1420-ம் பசலி முதல் கடை பிடிக்கலாம். கிராமக் கணக்குகளை எளிமைப் படுத்துதல் தொடர்பாக தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டிய கிராமக் கணக்குகள் விவரம் பின்வருமாறு:-

17. அடமானம் (மனை + நிலம்)
RSO 21 (மனை) RSO 15 (நிலம்)

1. பதிவேடுகள்

வீட்டுமனை விண்ணப்ப பதிவேடு ஆர்.எஸ்.ஓ தொகுதி I இணைப்பு XVI-ல் கண்ட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டும். வீட்டுமனை ஒப்படைப் பதிவேடு ஆர்.எஸ்.ஓ தொகுதி I இணைப்பு XVIII -ல் கண்ட படிவத்திலும் நில ஒப்படைப் பதிவேட்டை ஆர்.எஸ்.ஓ தொகுதி I - ல் கண்ட படிவத்திலும் / 'இ' பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். கிராமக் கொடை மற்றும் தரைப்படங்கள் அமைப்புத் திட்ட பதிவேட்டை V.A.O. நடைமுறை நூல் தொகுதி II பக்கம் 60 பிற்சேர்க்கையில் கண்டபடி இருபாகங்களாக எழுத வேண்டும்.

2. வீட்டுமனைப் பட்டா பெற முன்னுரிமை உடையோர்

1. எல்லைப் பாதுகாப்புப் படை, டெரிடோரியல் ஆர்மி மற்றும் இந்தோ திபெத் எல்லைப் பாதுகாப்புப் படை உட்பட்டு முப்படைப் பணியில் இருந்த போது போரில் உயிரிழந்தவர்கள் மற்றும் செயலிழந்தவர் குடும்பத்தினர்.

2. தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பு நிலமற்ற ஏழைகள்

3. 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை ஒழிப்பு சட்டத்தின்படி விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள்

4. முன்னாள் முப்படை வீரர்கள்

5. முப்படை & எல்லை பாதுகாப்புப் படையில் பணிபுரியும் வீரர்கள்

6. ஆதரவற்ற பெண்கள் மற்றும் கைம்பெண்கள்

7. பிற நிலமற்ற ஏழைகள்

(அரசாணை (நிலை) 275 வருவாய்த்துறை 2.4.94 அரசுக்கடிதம் 64007/நி.மு./96-1நாள் 31.3.97)

3. அடமானம் செய்யும் அதிகாரம்

அலுவலர்	நிலம் மற்றும் மனை
1. தாசில்தார்	ரூ. 30,000 வரை
2. R.D.O	ரூ. 50,000 வரை
3. D.R.O	ரூ. 1,00,000 வரை / கலெக்டர் ரூ. 4,00,000
4. C.L.A	ரூ. 5,00,000 வரை
5. அரசு	ரூ. 5,00,000க்கு மேல்

G.O.M.S. 248 Revenue L.D.1(2) Dept. dt : 28.07.2009

நிலக்கிரயம் வசூல் செய்யும் இனங்களுக்கும் இப்பண வரம்பு பொருந்தும் (அரசு கடித எண் (நிலை) 53 வருவாய் 06.02.2001)

நஞ்சை / நீர் பாய்ச்சப்படும் புன்செய் நிலங்களை ஒப்படைசெய்யும் அதிகாரி R.D.O. ஆவார். [R.S.O. 15-3(x)]

இனி பெண்கள்/மனைவிமார்கள் பெயரிலேயே மனை/நில அடமானம் செய்யப்பட வேண்டும். (ஜி.ஓ.எம்.எஸ். 1380 வருவாய்த்துறை நாள் 22.8.89)

4. ஒப்படை விஸ்தீர்ணம்

மனை	நிலம்
மாநகராட்சி 1 சென்ட் (40 ச.மீ)	நஞ்சை 1.50 ஏக்கர்
நகராட்சி 1½ சென்ட் (60 ச.மீ)	புஞ்சை 3.00 ஏக்கர்
பேரூராட்சி, கிராமம் 3 சென்ட் (121 ச.மீ)	
(G.O.Ms. 1657 Revenue 11.12.91)	(G.O.1562 Revenue 24.5.71)

மாவட்ட அளவில் ஒரு ஏக்கர் மட்டுமே இலவச ஒப்படை வழங்க இயலும். ஒரு ஏக்கருக்கும் கூடுதலாக நில ஒப்படை செய்ய, அரசு அளவில் முடிவு செய்ய வேண்டும். (அரசாணை (நிலை) 441 வருவாய் (நி.மு.3.2) துறை 14.07.2006)

தகுதியுள்ள நபர் சாகுபடிமூலம் கூடுதல் அனுபவம் செய்துவந்தால், மேற்கொண்டு 10 சென்ட் வரை, வரன்முறைப்படுத்தி, அதற்கான நிலக் கிரயத்தை வசூலிக்கலாம்.

வீடுகள் குடியிருப்பு - நிலக்கிரயம் வசூல் செய்தல் : - வீடுகள் கட்டி குடியிருப்பவர் ஆக்கிரமிப்புகளை வரண்முறைப்படுத்துதல். வழிகாட்டி மதிப்பு அடிப்படையில் வசூல் செய்யலாம். (அரசுக் கடித எண். 13352/வருவாய் நி.மு 1 (2) துறை 2007 - 4 நாள் : 19.06.2007)

நிலக்கிரயம் - செலுத்துச் சீட்டு தலைப்பு : 0029 Land Revenue - 800 Land Other Receipts - A.D. Land Value of Assignment Land''. D.P. Code 002900800AD003.

(CLA Lr. E1/3900/79 dt:6.3.82)

5. மரம், கிணறு, கட்டிடமதிப்பை வசூலித்தல்

மனுதாரர் முயற்சியில் உருவாக்கப்பட்டிருந்தால் (or) அவரது வறுமையைக் கணக்கில்கொண்டு வசூலிக்காமல், தள்ளுபடி செய்யலாம். ரூ.100 மதிப்பிற்குள் வரும் இனங்களில் வட்டாட்சியரும் ரூ.200/- ற்குட்பட்ட இனங்களில் RDO வும் ஆணைப்பிறப்பிக்கலாம். (R.S.O. 15-14).

6. நகரத்தில் அடமானம் செய்தல்

அதிகாரம் பெற்ற அலுவலர்	பகுதி	எல்லை வரம்பு
1. கலெக்டர்	நகராட்சிகள் / மாவட்ட தலைநகர்	நகர எல்லையிலிருந்து 5 மைல் வரை
2. டி.ஆர்.ஓ	இரண்டு லட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட இதர நகரங்கள்	நகர எல்லையிலிருந்து 5 மைல் வரை
3. டி.ஆர்.ஓ	ஒரு லட்சத்திலிருந்து இரண்டு லட்சம் வரை மக்கள் தொகை கொண்ட நகரங்கள்	நகர எல்லையிலிருந்து 3 மைல் வரை
4. ஆர்.டி.ஓ	ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்டு ஒரு இலட்சத்திற்குட்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்கள்	நகர எல்லையிலிருந்து 2 மைல் வரை
5. ஆர்.டி.ஓ	50,000 மக்கள் தொகைக்கு குறைந்த இதர நகரங்கள் (5000 வரை)	நகர எல்லையிலிருந்து 1 மைல் வரை

(ஜி. ஓ. 3166 (வரு) நாள் : 05.11.66)

சென்னை நகரிலிருந்து 32 Km சுற்றளவுக்குள் வீட்டுமனை ஒப்படை தடை செய்யப்பட்டுள்ளது. G.O.Ms. 1135 Rev16 3/1962 அதேபோல மாவட்ட தலை நகரிலிருந்து 8 Km சுற்றெல்லைக்குள் மனை ஒப்படை தடை செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் மனைப்பட்டா தடை ஆணை உள்ளது.

(இலவச பட்டா பெற ஆண்டு வருமான வரம்பு
கிராமப்புறம் ரூ. 16,000/-, நகர்ப்புறம் ரூ. 24,000/-
(ஜி.ஓ.நிலை 287 (வரு) 31.5.2000)
(ஜி. ஓ. நிலை 506 (வரு) 26.11.2002)

8. அரசு அலுவலர்களுக்கு ஒப்படை செய்தல்

மனை

அதிகாரம் பெற்ற அலுவலர்	அடமானதாரர்
கலெக்டர்	துணை தாசில்தார் நிலை அலுவலர் வரை
நில நிர்வாக ஆணையர்	துணை தாசில்தார் நிலைக்கு மேற்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற அரசிதழ் பதிவுறா அலுவலர் வரை
அரசு	ஐ.ஏ.எஸ். தகுதி/அலுவலர் மற்றும் டி.ஆர்.ஓ/ கண்காணிப்புப் பொறியாளர் தகுதி நிலை அலுவலர்கள் (ஜி.ஓ.187 (வரு) 28.1.77)

நிலம்

இராணுவத்தில் பணிபுரிபவர், அரசு அலுவலர்கள் மற்றும்மீண்டும் அரசுப் பணி கிடைத்த முன்னாள் இராணுவத்தினர் நில அடமானம் பெறத் தகுதி அற்றவர்கள் [பி.ப்பி, 806/பி/79 நாள் (25.9.79)] [G.O.Ms.1660 Rev. 25.7.78]

9. ஒப்படை செய்ய தடை ஆணை விதிக்கப்பட்ட நிலங்கள்

1. ஓடை, குளம், வாய்க்கால் போன்ற -ர் நிலை புறம்போக்குகள் [ஜி.ஓ. நிலை 41 (வரு) 20.1.87.]
2. மேய்ச்சல் தரை, [ஜி.ஓ. (நிலை) 959 (வரு) (23.6.87)]
3. மயானம், இடுகாடு ஜி.ஓ. (நிலை) 116 (வரு) (20.1.88)
4. மந்தைவெளி (கால்நடை தங்குவதற்கு உள்ள இடம், ஜி.ஓ. (நிலை) 75 (28.5.2007) உரம் சேமித்து வைக்கும் இடம், பொங்கல் விழா கொண்டாடப்படும் இடம்)

10. வரைபட ஒப்புதல்

வீட்டுமனை அடமானம் வழங்குவதற்கு முன்னதாக லே அவுட்டுகள் நகர ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் (Town Planning Approval) பெறப்பட வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெறப்படாத இனம் இருப்பின், அதற்கான பிரத்தியேக காரணம் விளக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநர்களின் பின்ஏற்பு பெறப்பட வேண்டும். (Board's Q3-3239/74-3 dt. 29.8.74) வீட்டுமனைப் பட்டாவுடன் வரைபடம் ஒன்றை இணைத்து வழங்க வேண்டும். (CLA. Circular m2/67264/84 (survey) 26.1.85)

11. ஒதுக்கக்காட்டிற்கு அருகிலுள்ள நிலம்

ஒதுக்கக் காட்டின் நேர் எல்லை வரை ஒப்படை செய்தல் கூடாது. ஒதுக்கக் காட்டின் எல்லைக்கும் ஒப்படை நிலத்திற்கும் இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று சங்கிலி அகலமுள்ள திறந்த இடைவெளி நிலம் ஒப்படை செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட வேண்டும். (RSO15-38 (iii)

12. கடலை ஒட்டியுள்ள நிலம்

கடல்நீர் உயர்மட்ட வரம்பிலிருந்து 1 பர்லாங்குகள் கடற்கரை அருகிலுள்ள நிலங்கள் CLA அனுமதி இன்றி ஒப்படை செய்யப்படக்கூடாது. RSO 15-38 (ix)

13. இரயில் நிலையத்தை ஒட்டியுள்ள நிலம்

இரயில் நிலையத்திலிருந்து ½மைல் தூரத்திற்குள்ளிருக்கும் நிலங்களை, இருப்புப்பாதை அதிகாரி மற்றும் கலெக்டர் முன் ஒப்பளிப்பின்றி, அடமானம் வழங்கக் கூடாது. (RS15-38(x)

14. படுகை (ஆறுகளின் வெள்ளக்கரைகளுக்குள் அமைந்த) நிலம்

ஒப்படை கூடாது. 10 ஆண்டுகளுக்கு மிகாமல் குத்தகைக்கு விடலாம். ஆண்டுத் தொகை ரூ. 100/- ற்குள் மற்றும் 100 ற்கு மேல் வரும் இனங்களில் முறையே RDO மற்றும் Collector உறுதி செய்யலாம்.

15. ஒப்படை நிபந்தனைகள்

1. ஒப்படைபெற்ற நாளிலிருந்து 3 ஆண்டிற்குள் விவசாயம் செய்ய வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களால் விவசாயம் ஆரம்பிக்க முடியவில்லை என்றால் R.D.O. அதிகபட்சம் மேலும் 2 ஆண்டுகள் வரை கால நீடிப்பு செய்யலாம்.

2. ஒப்படைதாரர் (OR) அவரது வாரிசுதாரர் நேரடியாக விவசாயம் செய்ய வேண்டும். குத்தகைக்கு விடக்கூடாது.

3. ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை 10 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது. அதன்பிறகு ஒரு தகுதியுள்ள நபருக்குத்தான் விற்க வேண்டும். அதற்கு தாசில்தார் (OR) R.D.O. விடம் முன் அனுமதி பெற வேண்டும். (G.O.Ms. 2485 Rev 9.11.79)

4. சவுக்கு, தென்னை மற்றும் தோட்டப் பயிர்களையும் (நெல், வாழை போன்றே) சாகுபடி பயிர்களாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். (G.O.Ms.1030 Rev. 9.7.85)

16. ஒப்படை ரத்து செய்தல்

விதிமுறை மீறல் இனங்களில் (R.S.O.15-15) காலவரம்பின்றி R.D.O. அடமானத்தை ரத்து செய்யலாம். ஒழுங்கீன அடமானங்களில் (RSO 15-18) முதல் மூன்று வருடம் வரை RDO வும், காலவரம்பின்றி DRO வும் ரத்து செய்ய ஆணையிடலாம். 14.5.1973 ற்கு முன்னர் ஒப்படை வழங்கப்பட்ட இனங்களில் R.S.O.15-18 ன் கீழ் ஒப்படை ரத்து செய்ய வேண்டிய நேர்வுகளில் CLA ஆணையிட வேண்டும். (G.O.Pt. 2555 Rev. Dt. 14.5.73)

17. மேல்முறையீடு

தாசில்தார் ஆணையை எதிர்த்து RDO மற்றும் DRO விடம் 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். இதனை எதிர்த்து C.L.A. யிடம் 40 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். இரண்டாவது மேல் முறையீடு அனுமதி இல்லை. (RSO 15-15) DRO C.L.A. மற்றும் அரசினற்கு 30 நாட்களுக்குள் ரிவிஷன் மனு அனுப்பலாம். (R.S.O.15-18).

நகரமைப்பு ஆலோசனைக்குழு

நகரமைப்பு ஆலோசனைக் குழு நகரங்களில் நிலக் குத்தகை, நில உரிமை மாற்றம், நில மாற்றம் மற்றும் அடமானம் இவற்றிற்கு R.S.O. படி முடிவு செய்ய கீழ்கண்ட நகரமைப்பு ஆலோசனைக் குழு நியமனம் செய்து ஆணையிடப் படுகிறது.

கலெக்டர்	-	தலைவர்
D.R.O.	-	உறுப்பினர்
Supdt of Police	-	உறுப்பினர்
நகராட்சி ஆணையர்	-	உறுப்பினர்
EE (PWD)	-	உறுப்பினர்
ஆணையர் நகர மற்றும் ஊரக அமைப்புத் திட்டம்	-	உறுப்பினர்

CLA Prods N.2/6765/ 05 dt 18.3.2005

With Drawal Notification

Procedure of Publication of withdrawal notification both in T.N.G.G and District Gazette shall be continued (G.O.Ms.974 Revenue 4.5.1977)

ASSIGNMENT - RESUMING AUTHORITY

TAHSILDAR - If the land is non valuable

R.D.O. - If the land is valuable

C.L.A/Govt - For land assigned Prior to 14.5.1975

(Govt.Lr.36741/LD-3-1/97-1 Revenue Dt.15/07/1997)

மலைப்பிரதேசங்களில் அடமானத்திற்கு தடை

நிலச்சரிவை தடுக்கவும் சுற்றுப்புற சுழலை காக்கவும் மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் விவசாயத்திற்கு நில ஒப்படை வழங்குவதை அரசு இவண் தடை செய்கிறது.

(G.O.M.S. (நிலை) 1168 வருவாய் 25/07/1989)

சிறப்புத்தன்மை மற்றும் மதிப்பு மிகுந்த நிலங்களை அடமானம் செய்தல் RSO 15 – பகுதி II – பிரிவு (2-2)

சிறப்புத்தன்மை மற்றும் மதிப்பு மிகுந்த நிலங்கள்:-

i. நஞ்சை நிலங்கள்
ii. பெரிய கிராமத்தில் உள்ள நிலம்
iii. நகரை ஒட்டியுள்ள நிலங்கள்
iv. மதிப்புமிகுந்த (பாசன வசதி பெறும்) புஞ்சை
v. மாவட்ட ஆட்சியரால் மதிப்பு மிகுந்தவைஎனத் தீர்மானக்கப்பட்டநிலங்கள்.

ஒப்படை நடைமுறை

நிலமற்ற மற்றும் ஏழை மக்களுக்கு நகரை ஒட்டியுள்ள நிலங்களை R.D.O. நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டு ஒப்படைசெய்யலாம் மற்றவர்க்கு பகிரங்க பொதுஏலத்தில் விட்டு, நிலக்கிரயம் R.D.O.வசூலிக்கலாம். நிலக்கிரயம் முழுவதும் வசூலித்துக் கொண்ட பிறகே நில ஒப்படை (பட்டா) ஆணை வழங்கப்படும்.

சொந்த உழைப்பின்மூலம் சாகுபடி செய்யக்கூடிய மதிப்புமிக்க நிலங்களை இலவசமாக நிலக்கிரயமின்றி R.D.O. நிலமற்ற ஏழைமக்களுக்கு ஒப்படை செய்யலாம். ஷநிலங்களை இரண்டு வருடங்களுக்குள் கொண்டு வரவேண்டும் என R.D.O. ஒப்படை நிபந்தனை விதிக்கலாம். உசிதமெனப்பட்டால் சாகுபடி காலத்தை கலெக்டர் மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டிக்கலாம்.

பொதுஏலத்தில் விட உத்தேசிக்கப் பட்ட நிலங்கள் குறித்த விளம்பரம், மாவட்ட அரசிதழல் விளம்பரம் பிரசுரம் செய்யப்படவேண்டும். மேலும் ஏலக் காலத்திற்கும்.அரசிதழில் விளம்பரம் ஆன நாளிற்கும் இடையே 15 நாள் இடை வெளிகாலம் கண்டிப்பாக இருத்தல் வேண்டும்.

நிலைபதிவேடு 'A'மற்றும் 'A'பதிவேட்டின் உள்ளடக்கம்

நிலைப்பதிவேடு 'A' என்பது புலங்களையும் அவைகளில் ஏற்படும் மாறுதல்களையும் காண்பிக்கும் நிலைப்பதிவேடாகும். பதிவேட்டின் குறிப்புரைக் கலத்தில் புறம்போக்கு நிலங்களின் வகைகளையும், கிணறு கால்வாய்கள், நிலவியல் பாதை, வாய்க்கால், போன்ற வற்றையும் குறிக்கவேண்டும். இப்பதிவேடு இரட்டைப் படிகளாக எழுதப்பட்டு, வட்டாட்சியர் அலவலகத்திலும். V.A.O. அலுவலகததிலும் இருக்க வேண்டும். கிராமத்திலுள்ள பதிவேட்டில் மாற்றம் செய்யப்படும் பொழுது வட்டாட்சியர் அலுவலகப்பதிவேட்டிலும் எடுத்தெழுதப்படவேண்டும்.

உரிமை கைவிடல் (Relingushment)

வருவாய் நிலை ஆணை 33-ல் இது குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. 'அரசின் பல்வேறு அபிவிருத்திப்பணிகளுக்காக நிலத்தின் பட்டாதாரர் அவருடைய நிலத்தின் உரிமையை விட்டுக் கொடுத்தல், உரிமை கைவிடல் ஆகும். வட்டாட்சியரிடம் நிலத்தின் உரிமையை கைவிட ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கலாம். அதன் அடிப்படையில் வட்டாட்சியரால் ஏற்பளிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட புறம்போக்கு நிலமாக வட்டாட்சியரால் மாற்றி ஆணைபிறப்பிக்கப்படும். மேலும் அந்த நிலத்திற்குரிய நிலவரியும் தள்ளுபடி செய்யப்படும் இது குறித்து விவரங்கள் கிராமக் கணக்கு எண் 3லும், வட்டக்கணக்கு எண் ரிஜிஸ்தர் 'G'யிலும் அடங்கியுள்ளன.(R.S.O.33).

27. மரப்பட்டா, மரங்கள் ஏலம் & மர வெட்டு (RSO 18, 18A & 18B)

I. 2சி பதிவேடு: இது 5 வருடத்திற்கு ஒரு முறை எழுதப்பட வேண்டும். வருவாய் அலுவலர்களால் வருவாய் ஏதும் வசூலிக்கப்பட்டாலொழிய வனத்துறை மற்றும் பொதுப்பணித்துறையின் பொறுப்பிலுள்ள மரங்கள் இந்தக் கணக்கில் இடந்தரலாகாது. இப்பதிவேடு கீழ்க்கண்ட 4 பிரிவுகளில் எழுதப்பட வேண்டும்.

(கிராம நிர்வாக நடைமுறை நூல் பக்கம் 18)

1. அரசுத் தோட்டங்கள்

2. பொது உபயோகத்திற்கு விடப்பட்ட குடிகளின் தோட்டங்கள் (ஆர்.எஸ்.ஓ.19/2 ல் அளிக்கப்பட்ட நீண்ட கால குத்தகை இதன் கீழ் வரும்).

3. அரசால் வரி விதிக்கப்பட்ட/குத்தகைக்கு விட்ட சிதறலாக உள்ள தனி மரங்கள்.

4. பஞ்சாயத்திற்கு/நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு களில் உள்ள மரங்கள்

2 சி பட்டா வகைபாடுகள்

1. கடமை : புதுக்கோட்டை மாவட்டத்தில் முந்தய தர்பார் காலத்தில் வழங்கப்பட்ட 2சி பட்டாவாகும். மரம் பட்டுப்போனால் அல்லது விழுந்து விட்டால் மரக்கிரயத்தில் பாதி 2 சி பட்டாதாரரைச் சாரும். மீதி பாதி அரசைச் சேரும். ஏனென்றால் மரக்கிரயத்தில் பாதியை பட்டாதார் ஏற்கனவே செலுத்தி 2சி பட்டா பெறுகிறார்.

2. ஏகசால்

புதுக்கோட்டை மாவட்டத்தில் முந்தய தர்பார் காலத்தில் வழங்கப்பட்ட இப்பட்டா ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும். பசலி இறுதியில் முடிவிற்குள்ளாகும். ஏகசால் பட்டாதாரிகளுக்கு மரத்தில் உரிமையில்லை. பட்டுப்போன அல்லது காய்ப்பு மாறிப்போன மரங்களின் கிரையம் முழுவதும் அரசைச் சார்ந்தது.

3. கெடு இஜரா

புதுக்கோட்டை மாவட்டத்தில் முந்தய தர்பார் காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு அதாவது 5 பசலி வரை அல்லது அதற்கு குறைவான காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமையாகும். பட்டுப்போன அல்லது காய்ப்பு மாறிப்போன மரங்களின் கிரயம் முழுவதும் அரசைச் சார்ந்தது.

4.2 சி பட்டா [R.S.O : 18]

வருவாய் நிலையாணை எண்.18 படி வழங்கப்படும் மரப்பட்டாவாகும். புறம்போக்கில் மரம் வளர்த்தவர் வீடு, பட்டா நிலத்தினை ஒட்டிய மரங்கள் முதலியவற்றிற்கு வீடு அல்லது நிலச் சொந்தக்காரர் பட்டா பெறலாம். பஞ்சாயத்தின் சம்மதமின்றி '2சி' பட்டா பெறலாகாது. மரம் அரசுக்குச் சொந்தமானது. மேம்பலன் மட்டும் 2 சி பட்டாதார் அனுபவித்துக் கொள்ளலாம். '2சி' பட்டாவை உரிமை மாற்றவியலாது.

2சி பட்டா ஆணை (Order of Grant) கீழ்க்கண்ட படிவத்தில் வழங்கப்பட வேண்டும்.

2சி மரப்பட்டா - ஆணை

நி.மு.எண். நாள் :.....

(18 ஆவது நில ஆணை 2 (ஆ) ஆவது பத்தி (ii) ஆவது உட்பிரிவு)

மர வரித் திட்டத்தின் கீழ்க் கொடுக்கப்படும் மர பட்டா ஆணை

.....மாவட்டம் ..... தாலுக்கா

.....கிராமம்.....புறம்போக்கு.....தரிசு நில அளவை எண்..... நிலத்தில் உள்ள விளிம்பில் குறிக்கப்பட்ட மரங்களின் மேல் பலனை அனுபவிக்கும் உரிமையை 18 ஆவது நில ஆணை 2 (ஆ) (ii) ஆவது பத்தியை அனுசரித்து முடிவு செய்யப்பட்டிருக்கிற தாகையால் தாசில்தாராகிய நான் இதனால் இப்பொழுது வரி விதிக்க மேற்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட மரங்களை திரு.....க்கு பின் வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அளிக்கிறேன்.

மரம் பெயர்	எண்ணிக்கை	1 மரத்திற்கு வரி	மொத்த ஆண்டு வரி

நிபந்தனைகள் :-

1. கொடை பெற்றிருப்பவருக்கு மரங்களின் மேல் பலன்களில் அவையாவன பழங்கள், இலைகள், வெட்டபட்ட சிறு கிளைகள், மட்டைகள் இவற்றிற்கு உரிமையுண்டு. இருப்பினும் பட்டுப்போன அல்லது காற்றினால் விழுந்த மரங்களை வெட்டி அவற்றை எடுத்துக் கொள்ளும் உரிமை இல்லை.

2. அறிவிப்பு கொடுக்காமல் பசலி ஆண்டு முடிவிலும் அல்லது மூன்று மாத அறிவிப்பு கொடுத்த பின்னர் எக்காலத்திலும் கொடை பெற்றிருப்பவருக்கு இழப்பீடு கொடுக்காமல் இந்தக் கொடையை அரசினர் ரத்து செய்யலாம்.

3. ஆண்டு வரியாகிய .....ரூபாயை..... தவணையில் ..... தேதி செலுத்த வேண்டும்.

4. ஆண்டு வரியைப் பட்டதாரர் செலுத்தத் தவறினால் 1864 ஆவது ஆண்டு 11 ஆவது சட்டம் 52 ஆவது பிரிவின் கீழ் நில வருவாய் பாக்கியைப் போல் அது வசூலிக்கப்படும்.

5. மரங்கள் பட்டுப்போனால் அல்லது கீழே விழுந்துவிட்டால் அவற்றைப்பற்றி கொடை பெற்றிருப்பவர் கிராம அலுவலர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

6. கொடை பெற்றிருப்பவர் செயலாலோ அல்லது கவனக் குறைவாலோ அல்லது உடந்தையாலோ மரத்திற்குச் சேதம் அல்லது இழப்பு நேரிட்டால் வருவாய்த்துறை அலுவலர்கள் தீர்மானிக்கக்கூடிய மரக் கிரயத்தைக் கொடை பெற்றிருப்பவர் செலுத்த வேண்டும்.

இதற்குச் சான்றாக இவற்றைக் தெரிவிக்கும் நான் (பெயரும் வேலையின் பெயரும்) சென்னை கவர்னருக்காக அவர் சார்பிலும் அவர் ஆணையையும் கட்டளையையும் அனுசரித்து..... ஆண்டு.....மாதம்.....தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

கையெழுத்து

வேலையின் பெயர்

ஒரு குடும்பத்திற்கு ஒரு 2சி பட்டா மட்டும் வழங்கப்படும். ஒரு 2சி பட்டாவிற்கு உயரளவாக 20 புளிய மரங்கள், அல்லது 25 தென்னை மரங்கள் அல்லது 50 பனை மரங்களுக்கு மிகாமல் வழங்க (Go. 705 Revenue Dept. Dt 19.06.92 படி) உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இனி மகளிர் பெயரில் 2சி பட்டா வழங்கப்பட வேண்டும்.

அதேபோன்று, '2சி' மரங்கள் பட்டுப்போய் அல்லது புயலால் விழுந்தாலோ, காணாமல் போனாலோ, காய்ப்பு இல்லாமல் போனாலோ '2சி' கணக்கிலிருந்து நீக்கி ஆணையிட வட்டாட்சியருக்கு அதிகாரம் உள்ளது. [R.S.018 - 2(c)]

வட்ட அலுவலக '2சி' பதிவேடுபடி நிலவியலில் மரங்கள் இருத்தல் வேண்டும்.

[CLA Lr. F2/26643/11/dt 9.3.2012]

5. அமானி

மேலே உள்ள 4 பிரிவுகளையும் சாராத அரசுக்குச் சொந்தமான மேம்பலன் தரும் இதர அனைத்து மரங்களில் இளமரங்களும் இதில் இடம் பெறும். வருவாய் நிலையாணை 18 'அ' படி இவ்வகை மரங்களின் மேம்பலன் ஏலம் வருடா வருடம் பொது ஏலத்திற்கு கொண்டு வரப்படும்.

மர உரிமைச் சான்றிதழ்

V.A.O.வால் வழங்கப்படும், இச்சான்றிதழில் வருவாய் ஆய்வர் மேலொப்பமிட வேண்டும். இச்சான்றிதழில் மரங்களின் விவரமும், எண்ணிக்கையும் குறிப்பிடப்பட வேண்டும்.

வனத் துறை சார்நிலை அலுவலர்கள் காடுகளில் மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வியபாரிகளுக்கும் தனி நபர்களுக்கும் படிவ உரிமம் வழங்கும் போது, அதன் நகலை குறிப்பிட்ட மரம் குறிப்பிட்ட நிலத்தில் பயிரிடப்பட்டவை எனச் சான்றளிக்க வருவாய் ஆய்வருக்கு அனுப்ப வேண்டும்.

(அரசாணை (நிலை) 1306 வருவாய் (வ.2) துறை நாள் : 10.12.1996)

II. 2சி மரவரி விகிதங்கள்

ரகம்	மரவரி (ரூபாயில்)	
புளி	6	
மா	6	
பலா	6	அரசு ஆணை எண் 864 வருவாய்
தென்னை	8	நாள் 30.8.96
பனை	1	

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள மரவரி விகிதங்கள் :

ரகம்	மரவரி (ரூபாயில்)	
1. இரப்பர் (பலன் தருபவை)	5	
2. இரப்பர் (பலனுக்கு வராதவை)	1	
3. இலவங்கம் (பலன் தருபவை)	5	
4. இலவங்கம் (பலனுக்கு வராதவை)	1	
5. மிளகு (பலன் தருபவை)	5	அரசாணை (நிலை)
6. மிளகு (பலனுக்கு வராதவை)	1	எண். 1009
7. கோக்கோ (பலன் தருபவை)	4	வருவாய் நாள் :
8. கோக்கோ (பலனுக்கு வராதவை)	1	24.07.1985.

9. ஜாதிக்காய் (பலன் தருபவை) 10
10. ஜாதிக்காய் (பலனுக்கு வராதவை) 2

நகராட்சி எல்லைக்குட்பட்ட 2 சி மரவரி வதூல் தொகையை நகராட்சி கணக்கிற்கு, சரிகட்டத் தேவையில்லை. (ஜி.ஓ.(எம்.எஸ்), 1881 ஆர்.டி. எல்.ஏ. நாள்: 20.7.74

III 2 சி மரவரியை வருவாய் வதூல் சட்டம் பிரிவு 52 ன் படி ஜப்தி நடவடிக்கை மூலம் வதூலிக்கலாம். (வருவாய் வாரிய க்யூ3/6263/70 நாள்: 10.9.71)

'2சி' மரவரி முழுவதும் ஊராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். ஊராட்சி இசைவு இன்றி '2சி' பட்டா வழங்கலாகாது. [R.S.O. 18 - 2 (b) (iii)]

ஊராட்சி சாலை, பாதை, மந்தைவெளி, மேய்ச்சல் தரை, மயானம், தோப்பு மற்றும் ஒதுக்கப்படாத காடு ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு என்பதால் இவற்றில் உள்ள மரங்களின் உரிமை ஊராட்சியைச் சாரும். [R.S.O. 18 (3)]

'2சி' மரவரி வகூல் விவரங்கள் கிராம '2சி', '7' மற்றும் '12' கணக்குகளில் எழுதப்பட வேண்டும்.

III. ஏலம் நடத்துதல் [R.S.O : 18A]

a) வருவாய்த்துறையில் ஏலம் நடத்துதலும் மஞ்சூர் செய்தலும்:

மரமதிப்பு ரூ. 500 ற்கு மேல் ரூ. 10,000 ற்குள் வருமென்று கருதினால், மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்தால் போதுமானது. மரமதிப்பு ரூ.10,000 ற்கு மிகுமானால், மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்வதோடன்றி மேற்படி ஏலத்தின் சாராம்சத்தை ஒரு தமிழ் தினசரி செய்தித் தாளில் தொடர்ந்து இரு தினங்களுக்கு விளம்பரம் செய்தல் வேண்டும். மதிப்பு ரூ. 500 ற்குள் இருக்கும் இனங்களில், அரசிதழ் (or) நாளிதழில் விளம்பரம் செய்ய வேண்டாம். (G.O.Ms.974 Rev. 14.5.76)

ஏல விளம்பரம் : – மரத்தின் உத்தேச ஏல மதிப்பு ரூ. 200/– ற்குள் இருந்தால் ஏல விளம்பரம் [RSO 18 - (A)] இணைப்பு XI -A யிலும் ரூ. 200ற்கு மேல் இருந்தால் இணைப்பு XI -B யிலும் கிராமத்தில் பிரசுரம் செய்யப்பட வேண்டும். [RSO 18 A (3)]

மரங்கள் மற்றும் மேம்பலன் ஏலம் உறுதி செய்யும் அலுவலர்கள்

	அலுவலர்	தொகை
i)	வட்டாட்சியர் ...	ரூ. 1000/- வரை
ii)	R.D.O	ரூ. 5000/- வரை
iii)	Collector	ரூ.5000/- ற்கு மேல்

(R.S.O 18 (a) (6)]

[அரசு ஆணை(பல்வகை) 461 வருவாய் நாள் : 25.3.1987]

ஏலம் உறுதி செய்யப்படும் வரை மரங்களின் பாதுகாப்புக்கு V.A.O. பொறுப்பானவர் (R.S.O 18 -A (4)

ஏல முடிவில் வசூலிக்கப்பட வேண்டியவை :

i) ஏலத் தொகை -
ii) விற்பனை வரி (5%) -
iii) சர்சார்ஜ் (2%) -

ஊராட்சியில் ஏலம் நடத்துதலும் மஞ்சூர் செய்தலும்:

ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலையில் உள்ள மரங்கள் மர மேம்பலன் ஏலம், காற்றில் விழலான மற்றும் பட்டுப்போன மரங்களின் ஏலத்தை ஊராட்சி நடத்தும்.

i. நெடுஞ்சாலை ரோடுகளில் உள்ள மரங்கள்:

மர மேம்பலன் ஏலம், காற்றில் விழலான மரங்கள் மற்றும் பட்டுப்போனவை முதலியவற்றின் ஏலம் ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்படும்.

ii. பொதுப்பணித்துறை புறம்போக்குகளில் உள்ள மரங்கள்

பொதுப்பணித் துறையினரின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களில் உள்ள மர மேம்பலன் ஏலம், காற்றில் விழலானவை மற்றும் பட்டுப்போன மரங்களின் ஏலத்தை P.W.D. நடத்தலாம். மேலும் P.W.D. Code Rule 344 (2) படி P.W.D கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களில் உள்ள உயிர் மரங்களை வெட்டி அப்புறப்படுத்த P.W.D. அனுமதி வழங்கும்.

iii. ஊராட்சிக்கு ஒப்படைக்கப்படாத புறம்போக்குகளில் உள்ள மரங்கள்

மரமேம்பலன் ஏலம், காற்றில் விழலான மற்றும் பட்டுப்போன மரங்களின் மேம்பலன் ஏலத்தை சம்பந்தப்பட்ட துறையே நடத்தும் உயிர் மரங்களை வெட்ட, சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறை கோட்டப் பொறியாளர்/நெடுஞ்சாலை செயற் பொறியாளர் / கோட்டாட்சித் தலைவர் அனுமதி வழங்கலாம். வெட்ட அனுமதிக்கப்பட்ட இம்மரங்களின் ஏலத்தை பஞ்சாயத்து நடத்தி, தொகையை பஞ்சாயத்துக் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளலாம்.

iv. ஊராட்சி ஒன்றிய பொறுப்பில் உள்ள சிறுபாசனக் குளங்களில் உள்ள மரங்கள்

மரமேம்பலன் ஏலம், காற்றில் விழலானவை மற்றும் பட்டுப்போன மரங்களின் ஏலத்தை ஊராட்சி ஒன்றியம் நடத்தும் ஊராட்சி ஒன்றியமானது இம்மரங்களின் பராமரிப்பை சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு விட்டிருந்தால், மேற்கண்ட ஏலத்தை பஞ்சாயத்து நடத்தும், ஏலத்தொகையை 50:50 வீதத்தில் ஊராட்சி ஒன்றியமும் ஊராட்சியும் பிரித்துக்கொள்ளும்.

ஊராட்சி ஏலம் நடத்துதல் முறை

ஏலத்தொகை ரூ. 1000/- ற்கு மேல் வருமென்று கருதினால் தினசரி செய்தித் தாளில் மூன்று முறையும், மாவட்ட அரசிதழில் ஒரு முறையும் விளம்பரம் செய்தல் வேண்டும். செய்தித் தாளில் விளம்பரம் செய்ய இயலாவிடில் முன்னதாகவே வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பஞ்சாயத்து அலுவலகத்தில் விளம்பர அறிவிப்பை ஏலதேதிக்கு 7 தினங்களுக்கு முன்னதாக ஒட்டி விளம்பரம் செய்ய வேண்டும்.

(ஊராட்சி நடைமுறை நூல் தொகுதி ஒன்று பத்தி 76 பிரிவு 12 (4)

ஊராட்சிக்கு ஒப்படைக்கப்படாத மரங்களின் மேம்பலன் ஏலத்தை வருவாய்த்துறை நடத்தும். அரசாணை 2172 வருவாய்த்துறை நாள் 4.11.77 ல் விவரித்துள்ளபடி ஏலத்தொகையை வருவாய்த்துறையும் சம்பந்தப்பட்ட ஊராட்சியும் பகிர்ந்து கொள்ளும் (ஊராட்சி நடைமுறை நூல் தொகுதி ஒன்று அத்தியாயம் நான்கு பத்தி 67)

பஞ்சாயத்து ஏலத்தைப் பொறுத்த வரையில் மரமதிப்பு ரூ. 1,000 ற்குள் இருந்தால் ஊராட்சி ஒன்றிய விரிவாக்க அலுவலர்களாலும் ரூ. 1,000 ற்கு மேல் இருந்தால் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களாலும் ஏலம் நடத்தப்பட வேண்டும். டவுன் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் செயல் அலுவலரால் ஏலம் நடத்தப்பட வேண்டும். (ஊராட்சி நடைமுறை நூல், அத்தியாயம் 5 பத்தி 76 பிரிவு 12(1)

மறு ஏலம்

ஏலம் குறைந்த தொகைக்கு சென்றுள்ளதாக புகார் மனு வந்தால், முதல் ஏலத்தில் சென்ற தொகையுடன் மேலும் 25% தொகை சேர்த்து செலுத்தும் பட்சத்தில் மறு ஏலம் நடத்த ஆணை பிறப்பிக்கலாம்.

IV உயிர் மரங்கள் - வெட்ட அனுமதி வழங்குதல் :

போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உயிருக்கு ஆபத்தாக சாலை ஓரங்களில் நிற்கும் உயிருள்ள மரங்கள், குடி-ர் ஊரணிகளில், குடி-ருக்கு கேடு விளைவிக்கும் வகையில் உள்ள உயிர் மரங்கள் இவற்றை வட்டாட்சியரின் இடப்பார்வைக்கு பின் கோட்டாட்சித் தலைவரின் அனுமதியின் பேரில், வெட்டி ஏலம் விட சம்பந்தப்பட்ட துறைக்கு உரிமை உண்டு. (அரசு ஆணை பல்வகை 351 வருவாய் நாள் : 22 /2/1982) கோட்டாட்சியரின் செயல்முறைகள் மாதிரிப்படிவம் :-

கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள்

ந.க. எண். /2017 நாள் :.....2017

பொருள் : மரம் .....வட்டம்

.....கிராமம் .....புல

எண்..... திட்ட விஸ்தீர்ணம்.....

ஏர்ஸ்.....புறம்போக்கு.....

கட்ட உத்தேசிக்கப்பட்ட நிலத்தில் உயிருள்ள மரங்கள் வெட்டி அப்புறப்படுத்திட ஆணையிடல் – தொடர்பாக..

பார்வை : (1) .....

(2) வட்டாட்சியரின் அறிக்கை ந.க. எண்.....

நாள்.....

ஆணை :

.....மாவட்டம்..... வட்டம்.....
கிராமம், புல எண்..... திட்ட விஸதீர்ணம்.....
ஏர்ஸ்..... புறம்போக்கில்..... கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தில் உள்ள பலன் தரக்கூடிய மரங்களை வெட்ட அனுமதி வழங்கக்கோரி வட்டாசியர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். வட்டாட்சியர் அறிக்கையின்படி .....கிராமம், புல எண்..... திட்ட விஸ்தீர்ணம் .....நிலத்தில்.....கட்டுவதற்கு இடையூறாக உள்ள கீழ்க்கண்ட மரங்களை வெட்டி அப்புறப்படுத்த உத்தரவிடப்படுகிறது.

மரங்கள் வகை எண்ணிக்கை மதிப்பு

மேற்படி மரங்களை வருவாய் நிலை ஆணை 18 (அ) வில் கண்ட நடைமுறைகளின்படி பொது ஏலமிட்டு ஏலத்தொகையினை உரிய அரசுக்கணக்குத் தலைப்பில் செலுத்தி அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவித்திட ஆணையிடப்படுகிறது.

வருவாய் கோட்டாட்சியர்

பெறுநர் : வட்டாட்சியர்

நகல் : (1) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

(2) தலைவர், ஊராட்சி மன்றம்.....பஞ்சாயத்து

V மரவெட்டு [R.S.O : 18B]

ஊராட்சி மற்றும் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்படாத மரங்கள் சாலையோர மற்றும் இதர புறம் போக்குகளில் நிற்கும் அனைத்து மரங்களின் பாதுகாப்பிற்கும் VAO முழு பொறுப்பு ஆவார். [R.S.O : 18B - (1)] திருட்டுத்தனமான மரவெட்டு இனங்களில் VAO -வின் கவனக்குறைவிற்கு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம் [R.S.O : 18B (2)]. மரவெட்டு நடந்த சிலமணி நேரங்களுக்குள் இந்நிகழ்ச்சி குறித்த அறிக்கையை Appendix - B -யில் கண்ட பி – ஃபாயிலுடன் (B - foil) வரிஆய்வர் 'A' படிவத்தில் வட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மரம் கைப்பற்றப்பட்டு இருந்தால் அதன் விபரத்தை படிவம் `H' ல் மாஜிஸ்திரேட்டிற்கு தெரிவிக்க வேண்டும். கைப்பற்றிய பொருளை

கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்படைத்து அதற்கான அத்தாட்சியை படிவம் `I' யில் அவரிடமிருந்து பெறவேண்டும். இதற்கென ஒரு பதிவேட்டை படிவம் 'I' யில் (இரட்டைப் பிரதியில் இருக்கும்) கிராம நிர்வாக அலுவலர் பராமரிப்பார். மரவெட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட இனத்தில் 'C' படிவத்தில் நோட்டீசை வட்டாட்சியர் குற்றவாளிக்கு அனுப்பி வைப்பார். கிரிமினல் குற்ற நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் 'E' படிவ நோட்டீசின் மூன்றாவது நகலுடன் 'A' படிவ அறிக்கை நகலையும் இணைத்து சம்பந்தப்பட்ட குற்றவியல் நீதித்துறை மாஜிஸ்திரேட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும். கம்பவுண்டிங் ஆணை படிவம் 'C' யில் பிறப்பிக்கப்பட்டு குற்றவாளிக்கு சார்வு செய்யப்படும். கம்பவுண்டிங் தொகையை வசூலித்துக் கொண்டு கைப்பற்றிய மரத்தை பறிமுதல் செய்து ஏலத்தில் விடலாம். அல்லது கம்பவுண்டிங் தொகையையும் மரமதிப்பையும் வசூலித்துக் கொண்டு மரத்தை குற்றவாளியிடமே கொடுத்து விடலாம். இது குறித்து ஆணையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். மரத்தை திருப்பிக் கொடுக்கும் பட்சத்தில் மேற்படி ஆணையில் ராசித் தொகையுடன் மரமதிப்பும் சேர்ந்துள்ளது. (மொத்தம் மரமதிப்பைப் போல் குறைந்தது இருமடங்கு இருத்தல் வேண்டும்) என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பறிமுதல் செய்வதென்றால் ராசித் தொகையில் மரமதிப்பு சேரவில்லை என்று குறிப்பிட வேண்டும்.

ஜி நோட்டீஸ்

நக அ 1

நாள் தாலுகா அலுவலகம்

.....தாலுகா .....

கிராமம், புல எண் ..... ல் ..... அன்று மரம் வெட்டிய குற்றத்தை ஒப்புக்கொண்டு ..... கிராமத்தைச் சேர்ந்த திரு.....

த/பெ.....என்பவர் அரசுடன் ராசி செய்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதால் இணக்கக் கட்டணமாக தெரிவித்துள்ள ரூ...../ - ஐ இந்த நோட்டிஸ் கண்ட ஒரு வார காலத்திற்குள் கருவூலத்தில் செலுத்தி செலுத்துச்சீட்டை ஆஜர் செய்ய வேண்டியது. அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் விதிமுறைகளை அனுசரித்து கிரிமினல் குற்ற நடவடிக்கை அல்லது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிப்பு செய்யப்படுகிறது.

பெறுநர்: வட்டாசியர்

நாள் : 8.5.97 ன் படி கீழ்கண்ட விகிதாசாரத்தின் அடிப்படையில் அரசு அலுவலர்களிடமிருந்து வசூலிக்கலாம்.

V.A.O.	-	50%
R.I.	-	30%
Zonal Dy. Tahsildar	-	15%
Tahsildar	-	5%

எந்த வகையிலும் வசூலிக்க இயலாத இனங்களில் ரூ.1,00,000/- வரை தள்ளுபடி செய்ய TNFC Vol-II - படி அரசுக்கு அதிகாரம் உண்டு.

VI மரங்களின் சீனியரேஜ் மதிப்புகள்

i. முதல் வகுப்பு ஒரு க்யூபிக் மீட்டருக்கு (M^3) ரூ. 400/-

1. கருவாகை, 2. கருப்பு குங்கிலியம், 3.பூவரசு, 4.சிசு, 5. வேம்பு, 6.கருமருதை, 7. சுலி (or) மார்லி, 8. அகில் அல்லது தேவகொன்னை, 9. சடாச்சி

ii. இரண்டாம் வகுப்பு ஒரு கியூபிக் மீட்டருக்கு ரூ. 200/–

1. கருவேலம், 2. கருங்காலி, 3. காட்டுவாகை, 4. மஞ்சக்கடம்பை, 5. நாமை, 6. நாகை, 7. பலா, 8. வெள்ளமருதை, 9. மல்லாடி, 10. கள்ளியாச்சா, 11. பிள்ளமருது, 12. உசிலை, 13. வெல்வேலம், 14. புளி, 15. மா, 16. இலுப்பை, 17. நுனா

iii. மூன்றாம் வகுப்பு ஒரு கியூபிக் மீட்டருக்கு ரூ. 100/-

1. கொன்னை, 2. புங்கம்

iv. இதரமரங்கள்

பனை	-	ரூ. 105 (ஒரு மரம்)
தென்னை	-	ரூ. 90/- (ஒரு மரம்)
விறகு	-	ரூ. 45/- (ஒரு மெட்ரிக் டன்னுக்கு)
அடுப்புக்கரி	-	ரூ.40/- ஒரு மெட்ரிக் டன்னுக்கு)

(அரசு ஆணை (பலவகை) எண் 993 வன, மீன்துறை நாள் 10.10.85)

மரவெட்டு மரமதிப்பு காணுதல்

$$\frac{G^2 X 7H}{88} = M^3$$

G = சுற்றளவு H = உயரம் M^3 = கன அளவு

ராசித் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் (15 தினங்களுக்குள்) குற்றவாளி செலுத்தவில்லையென்றால் கிரிமினல் குற்ற நடவடிக்கை எடுக்க படிவம் 'A' மற்றும் 'E' படிவ தகவல் அறிக்கை நீதித்துறை மாஜிஸ்திரேட்டிற்கு அனுப்பி வைக்கப்படும். நீதிபதி தனது தீர்ப்பின் முடிவை படிவம் `E' யில் வட்டாட்சியருக்கு அனுப்பி வைப்பார். A, C, E, G, H, I படிவங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறை (தேசிய நெடுஞ்சாலை தவிர) சாலை புறம்போக்கு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலை புறம்போக்குகளில் நிற்கும் சாலையோர மரங்களின் அனுமதியற்ற மரவெட்டு இனங்களில் சம்பந்தப்பட்ட துறையினரே ராசி செய்யும் அதிகாரம் பெற்றுள்ளனர். (G.O.Ms.535 Transport Dept. 24.5.89) இதர மரவெட்டு இனங்களில் தமிழ்நாடு வனச் சட்டம் 1882 பிரிவு 55 ன் படி ரூ. 500 வரை ராசி (Compounding) செய்ய தாசில்தாருக்கு அதிகாரம் உள்ளது. ரூ. 500 ற்கு மேல் ராசி செய்து கொள்ள அரசாணை (பலவகை) 461 வருவாய்த்துறை நாள் 25.3.87 ன் படி கோட்டாட்சித் தலைவருக்கு அதிகாரமுள்ளது. மேற்படி கம்பவுண்டிங் ஆணைகளை எதிர்த்து மேல் முறையீடு செய்ய விதிகளில் இடமில்லை. (C.L.A.K. Dis [G1] 10030/85 dt:18.5.1985) *புதுகை மாவட்ட அரசிதழ் எண்.12 நாள் 14.12.1995-ல் பிரசுரமானபடி, கீழ்கண்ட மரங்களின் மரமதிப்புத்தொகை பின் வருமாறு:*

		மதிப்பீட்டுத் தொகை (1 மெட்ரிக் டன்)
1.	*கருவேலம், நாட்டுக்கருவேல்* ----------	*ரூ.450/-*
	உசில் மற்றும் உடை ----------	*ரூ.450/-*
	காட்டுக் கருவேல், சீமைக் கருவை	*ரூ.300/-*

[Pudukkottai Collector's. Proceedings R.C184 14/95 ஆ3 Dt 2.12.96]

மரமதிப்பைப் போல் மூன்று மடங்கு வரை கம்பவுண்டிங் தொகை விதிக்கலாம். குற்றத்தை ஒப்புக்கொண்டு அரசுடன் ராசி செய்து கொண்டவர் பணத்தை கட்ட மறுத்தால், கிரிமினல் குற்றநடவடிக்கை மேற்கொள்ளலாம் (C.L.A's Circular: G1 / 14001 / 84 dt:26.12.85)

மரவெட்டு - வசூலிக்க இயலாத இனம்

வனக்குற்றவாளிக்கு சொத்து எதுவும்இல்லாமல், குற்ற நடவடிக்கையும் இவர்மீது எடுக்க இயலாத இனங்களில் CRA Circular D4 / 10731 / 95

R.S.O.19. கூட்டுத் தொழில்கள் (OR) பொதுத் தொழில்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தல்.

மாநிலத்தின் (OR) ஏதாவது ஒரு பகுதியை கூட்டுத் தொழில் நடத்த தொழில் முனைவோர் ஒருவர் விரும்பினால் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்க வேண்டும். அதிகாரம் பெற்ற அதிகாரி அந்த நிலத்தை ஆய்வு செய்து அது பொது நோக்கத்திற்கு தேவைப்படுகிறதா என்பதை முடிவு செய்ய வேண்டும். அதன் பிறகு அந்த நிலத்தை கையகப்படுத்த அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்ய வேண்டும். அதன் பிறகு அரசாங்கம் அந்த நிலத்தை கையகப்படுத்த அறிவிப்பு வெளியிட வேண்டும். அந்த அறிவிப்பு வெளியிட்ட 10 ஆண்டுகளுக்குள் அந்த நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். அரசாங்கம் வெளியிட்ட அறிவிப்பிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் முழு நிலத்திற்கும் இழப்பீடு தொகை செலுத்தப்பட வேண்டும். இந்த விதிமுறைகள் மாநில அரசாங்கங்களால் பொது நோக்கத்திற்காக நிலங்களை கையகப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த விதிமுறைகளை மீறும் பட்சத்தில், கையகப்படுத்தப்பட்ட நிலத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

பொதுத் தொழில்களை மேற்கொள்ளுதல் மற்றும் நிலம் கையகப்படுத்தல்

பொது நலனுக்காகவும் மக்கள் அனைவருக்காகவும் தொழில்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள், இதற்கான முன்னெடுப்புகளை அரசாங்கத்திடம் மேற்கொள்ள வேண்டும். பொதுப் பயன், பொதுவானது (OR) பொதுமக்களை முன்னிட்டு செய்யும் (OR) மக்கள் கூட்டமைப்பினர் அருகில் தொழில் முனைவோர் மேற்கொள்ளும் பணிகள் (OR) வளர்ச்சி பணிகள் (OR) நிறைவேற்றும் முனைய நிறுவனங்களை பயன் செய்யலாம். பணிகள் முடிவுற்றது யாருடைய (OR) பணிகளுக்கு கொடுப்பதற்கு யாருடைய அது பொதுத் தேவைக்காக கணக்கெடுப்பில் பதிவு செய்யப்படும்.

RSO19(A) புல்பண்ணைகளுக்கு நிலம் கையகப்படுத்தல்

எளிதாக நன்மைக்காக புல் பண்ணை அமைப்பதற்கு விரும்புபவர் அதற்குரிய அனுமதியை கலெக்டரிடம் பெற வேண்டும். பொதுப்பயன் தொடர்பான தீர்வை வரிவிதிக்கப்பட்ட (OR) தீர்வை வரிவிதிக்கப்படாத நிலங்களை, புல் பண்ணைகளுக்காக கலெக்டர் கையகப்படுத்த வேண்டும்

R.S.O. 19(அ) காவல் நடைப் பண்ணை (or) பால் பண்ணைக்கு நிலம் கொடுத்தல் :-

தனி நபர் (or) பலர் ஒன்று சேர்ந்து காவல் நடை வளர்ப்பதற்கு (or) பால் பண்ணை ஆரம்பிக்க, கலைக்டரிடம் மனுப் போக்கு கொள்ளலாம். கலைக்டர் அதை மாவட்ட நடுவர் மூலியாக C.L.A-க்கு மேல் அனுப்புவார்.

தீர்வை வரிக்கப்பட்ட (or) தீர்வை வரிக்கப்படாத நிலம் (or) புறம்போக்கு நிலங்கள் வழங்கத் தக்கவை ஆகும். கலைக்டர் — தினமும் நிலங்களை காவல் நடை கனிம் மேய்ச்சலுக்கும் விளைநிலத்தான் மற்ற தேவை களுக்கும் போதுமான நிலங்கள் உள்ளனவா என்பதையும் இந்நிலங்கள் நகர (or) கிராம வாசிகளுக்கு தேவைகளுக்கு அவசியம் என்பதையும் அவர் கவனித்து பரிந்துரை செய்ய வேண்டும்.

நிலம் கொடை பெற்றுக்கொள்பவர் நிபந்தனைப் பத்திரத்தை பெற்ற தினத்திலிருந்து 12 மாதங்களுக்குள் நிலத்தை பயன் படுத்தி (or) காவல் நடைத் தீவனப் பயிர் வளர்க்க வேண்டும். நிலம் கொடையாளர் யாதொரு நிபந்தனையும் மீறப்பட்டால், முழு மனு அறிவிப்பதற்குப் பின், அரசினர் நிலம் முழுவதையும் திரும்ப எடுத்துக் கொள்ளலாம்.

R.S.O. 19(ஆ) புறம்போக்கு நிலங்களில் குடியானவர்கள் மரங்கள் நடுதல் :-

எல்லைக் கற்கள், வாய்க்கால், உரத் தொழுக்கள் இவற்றை யொட்டித்தான் குடியானவர்களின் தோட்டங்களை ஒன்றுக்கு கொள்ளும் வரப்பிட்டு, புறம்போக்கு நிலங்களில் மரங்கள் நடுவதற்காக குடியானவர்களுக்கு அனுமதி அளிக்கத் தக்கதாகும்.

மரங்களை நடுவதற்கு முன்னதாக தாசில்தாரின் முன் அனுமதியைப் பெறவேண்டும். P.W.D. நிலங்களில் பெறுவதற்கு அந்தந்த துறையின் முன் அனுமதியைப் பெறவேண்டும்.

நிலம் கொடை, நிபந்தனை மீறாத வண்ணம் யாதொன்றையும் தொடர்ந்து செய்து கொடுக்கலாம். தினம் தோறும் பாதுகாப்பதற்காக வேலி அமைத்துக் கொள்ள கலைக்டர் அனுமதி வழங்கலாம். மரங்கள் நியாயமான கால அளவுக்குள் நடப்பெற வேண்டும், உரிமம் ரத்து செய்வதற்குள்ளாகும்.

மரங்களின் மேற்பரணையும் கூடவே தொடர்ந்து பயணமும் வைத்து மரங்களையும் இரவலன்றி உரிமம் பெற்றிருப்பவர் அனுபவம் செய்து கொள்ளலாம். மரத்தை வெட்டுவதற்கு முன்னர், தாசில்தார் அனுமதியைப் பெறவேண்டும்.

18. நிலக்கொடை
(Departmental Land Transfer)

(RSO 23, 23A)

I. மைய அரசு, மாநில அரசிற்கிடையே நிலம் கட்டிடங்களை மாற்றிக்கொள்ளுதல் (R.S.O.-23)

மாநில அரசினரின் நிலத்தை மைய அரசிற்கு மாற்ற வேண்டியிருந்தால், அந்த நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையும், கட்டிடம் ஏதேனுமிருந்தால் அதன் நடப்பு விலை மதிப்புத் தொகையும் மைய அரசு கொடுத்துவிட வேண்டும். நிலம் மாற்றிக் கொடுக்கப்படுவதால் மாநில அரசிற்கு நிலவருவாய் இழப்பு ஏற்படுமானால், அந்த இழப்பின் முதலீட்டையும் (Capitalised value of assessment) இதனுடன் சேர்த்து மைய அரசு கொடுக்க வேண்டும்.

முதலீட்டு மதிப்புத் தொகை (Capitalised value of assessment) (RSO I இணைப்பு XXX)	நிலத்தீர்வை OR மனைத்தீர்வையின் 25 மடங்குகள்

மைய அரசுக்கு நிலமாற்றம் செய்யப்படுவதற்கான நோக்கு ஒப்பளிப்புக்காக அரசிற்கு பணிந்தனுப்பப்பட வேண்டும்.

(R.S.O. 23A - 1(iv)

II. மாநில அரசின் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிலமாற்றம் செய்தல் (RSO 23-A)

விண்ணப்பம் :

விண்ணப்பம், உறுதிமொழி மற்றும் நிபந்தனைப்படிவம் மற்றும் படிவ அறிக்கைகள் 122 முதல் 125 வரை கண்ட பக்கங்களில் உள்ளன.

ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிலமாற்றம் கோரும்போது, கேட்புத்துறையினர் கலெக்டரிடம் தொடர்பு கொண்டு, சம்பந்தப்பட்ட இரு துறைதலைவர்கள், RDO வுடன் கூட்டாய்வு செய்ய வேண்டும். அலுவலர்களுக்கிடையே கருத்து வேறுபாடு இருக்குமெனில், CLA க்கு தெரிவிக்க வேண்டும். அதன் பின்பும் கருத்து வேறுபாடு இருக்கும் இனங்களில் அரசின் கருத்து பெறப்பட வேண்டும். (RSO 23A-1(i))

Value : Guide Line Value may be adopted in stead of arriving at land cost on recent sales statistics in respect of 23(A) cases. [G.O.M.S. 633 Rev LD 4 (1) Dept dt: 31.10.2007].

Forest Land :

Any forest land or portion there of will not be diverted for any non forest use except with the permission of Govt. of India, Ministry of Environment forests. (Section 2 of Forest Conservation Act1980)

நிலமாற்றம் செய்ய ஒப்பளிக்கும் அதிகாரம்

அலுவலர்	அதிகார எல்லை
RDO	No Power
Collector	நீர்நிலை, மயானம், மேய்ச்சல் தரை, மந்தைவெளி போன்றவை தடைவிதிக்கப்பட்டவை. நீங்கலாக இதர அரச நிலங்கள்
GOVT	தடை விதிக்கப்பட்ட அரச நிலங்கள்

(G.O.Ms. No. 503 Rev. Dept. Dt. 21.9.99)

மாற்றலுக்குப்பின் பாகுபாடு :

நில வகைபாடு, சம்பந்தப்பட்ட துறையின் பெயரில் மாற்றப்பட வேண்டும. எந்தக் காரியத்திற்காக (ஊர்மண்பாண்டத் தொழில் போன்று) நிலம பயனபடுத்தப்படுகிறதோ அதையும் குறிக்க வேண்டும். (RSO 23அ-2)

தண்டல் செய்தல் :

நிலமதிப்பு : வணிக காரியத்திற்காக நிலமாற்றம் செய்யப்படும் போது, கேட்புத் துறை நிலமதிப்பினை செலுத்த வேண்டும். (RSO 23A - 3(i))

மரமதிப்பு : நிலமாற்று ஸ்தலத்தில் உள்ள மரங்களின் விலை மதிப்பு அத்துறை வணிகத் துறையாக இருந்தாலும் இல்லாவிடினும் மரமதிப்பு வசூலிக்கப்பட வேண்டும். (R.S.O.23A - 3(ii))

கல், உட்பிரிவுக் கட்டணம்

கேட்புத்துறை வணிகத் துறையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொருண்மை கருதாது வசூலிக்கப்பட வேண்டும். (RSO 23A - 3(iii))

அரசுத் துறைகளுக்கு நிலங்கள் தேவைப்படும் போது, நிலமதிப்பு வரம்பன்றி நிலமாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம்

வழங்கப்பட்டுள்ளது. P.W.D. கட்டுப்பாட்டில் இல்லாத நிலங்களாக இருந்தாலும், P.W.D. - ஐ கலந்தாலோசித்து, தேவைப்படும் குறைந்த பட்ச பரப்பினை கண்டறிந்து, R.S.023 A ன் கீழ் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.

(அரசுக்கடித எண் 3114/நி.மு. 40 /2000-1 வருவாய்த் துறை நாள் : 31.1.2002)

மேய்ச்சல்/மந்தைவெளி நிலங்கள் - நிலமாற்றம் செய்தல் :-

வேறு துறைகளுக்கு மந்தைவெளி நிலங்களை மாற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்படின் மாவட்ட ஆட்சியர் கருத்துரு அனுப்புவதற்கு முன்பு அதே மாவட்டத்தில் சமமான பரப்புள்ள மாற்று நிலத்தை தெரிவு செய்யப்பட வேண்டும்.

மாற்று நிலத்திலுள்ள புதர்களை நீக்கி சமன் மற்றும் உழவு செய்து தொழுஉரம் அடித்து புல்விதைகளைத் தெளித்து மேய்ச்சல் நிலமாக உருவாக்க செலவினம் 1 ஏக்கருக்கு ரூ.6000/- இத்தொகையை நிலம் தேவைப்படும் துறைகள் (or) பொது நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(அரசு ஆணை (நிலை) 75 கால் நடை பராமரிப்புத் துறை 28.05.2007)

மேய்ச்சல் புறம் போக்குகளை நிலமாற்றம் செய்ய அரசு கால நடைபராமரிப்பு மற்றும் மீன் வளத்துறைக்கு மட்டுமே NOC வழங்க அதிகாரம் உள்ளது. மேலும் நிலமாற்றுக் கருத்துருக்கள், துறை மூலம் அனுப்பட வேண்டும் (கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடித எண் 52347/ ஆ2/2009 நாள் : 17.08.2009)

ஆணைபிறப்பித்த அலுவலருக்கு, ரத்து செய்யவும் உள்ள தன்னிச்சை அதிகாரம்:-

As per Section 21 of General Clauses Act/ 1897 (Central Act X of 1897), an authority who has power to issue, inter alia, has also power to rescend such order.

நுழைவு முன் அனுமதி வழங்கல் :-

அரசுக் கடித எண் 56932/ L D (IV) / 1998 வருவாய் நாள் : 3.12.2001 - படி பிற அரசுத்துறை மற்றும் நிறுவனங்களுக்கு தடைவிதிக்கப்படாத நிலங்களை நிலமாற்றம், பராதினம் செய்யும் நேர்வுகளில் மாவட்ட ஆட்சியர் முன் நுழைவு அனுமதி வழங்கலாம். தடைவிதிக்கப்பட்ட (banned categrory) நிலங்களைப் பொருத்து அரசினர் அளவில் முன் அனுமதி பெறப்பட வேண்டும் (நில நிர்வாக ஆணையர் கடிதம் B1/ 4290/2015. நாள்: 13.2.2015)

19. நில உரிமை மாற்றம்
(Alienation - RSO 24)

பதிவேடு

கிராமக் கணக்குகள் நடைமுறை நூல் பக்கம் 60 ல் கண்ட படிவத்தில் இப்பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பம் : விண்ணப்பம், உறுதிமொழி மற்றும் நிபந்தனைப் படிவங்கள் மற்றும் படிவ அறிக்கைகள் 122 முதல் 125 வரை கண்ட பக்கங்களில் உள்ளன.

பொதுவான கொள்கை

Single Market Value may be collected on placing lands at the disposal of T.I.D.C / SIPCOT / ELCOT / EB [GOMs 732 LD5 (1) Dept dt : 13.12.2007]. Value for alienation of lands to Slum Clearance Board may be arrived at on the basis of guide line value instead of recent sales statistics.

[G.O.Ms. 633 Revenue LD 4(1) Dept dt : 31.10. 2007]

ஆணையிடும் அதிகாரம்

	அலுவலர்	நிலமதிப்பு
1	வட்டாட்சியர்	ரூ. 50,000/- வரை
2.	R.D.O.	ரூ. 1,00,000/- வரை
3	D.R.O.	ரூ. 2,50,000/- வரை
4.	Collector.	ரூ. 10,00,000/- வரை
5.	C.L.A.	ரூ. 15,00,000/- வரை
6.	Govt.	ரூ. 15,00,000/-ற்கு மேல்

அரசு ஆணை(நிலை) 136 வருவாய் நிமு.5(2) துறை நாள்:25.04.2017

வீட்டு வசதி வாரியத்திற்கு தேவைப்படும் நிலங்களுக்கு Collector முன் அனுமதி மட்டும் வழங்கினால் போதுமானது. ஏற்கனவே நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு, இதுவரை நிலக்கிரயம் செலுத்தாத நேர்வுகளுக்கு நிலக்கிரயத்தை வசூலிப்பதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. [G.O. நிலை 315 வருவாய் நிமு 5 (2) துறை 24 /5/65]

In land alienation, if the value of the land exceeds Rs.1 Lakh, the Collector / DRO Should also inspect and offer views. [CLA. Lr. No B2/986/2006 dt: 30.1. 2006]

டிரஸ்ட் மற்றும் சுயநிதி கல்லூரிகள் நடத்தும் தனியார் நிறுவனங்களுக்கு அரசு நிலங்கள் ஒதுக்கக்கூடாது. (G.O.Ms. 2211 Rev 20.12.1989)

ஆதாய நோக்கமற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல் படுத்துவதற்காக TWAD, சென்னை, பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றிற்கு நிலங்கள் அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது. அது போல திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management) மற்றும் குப்பை மக்கு முற்றம் (Compost Yard) அமைத்தல் போன்ற பொதுமக்கள் நலன் கருதி நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிலங்களை நிலக்கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யலாம் என அரசு ஆணையிடுகிறது.

(அரசாணை (நிலை) 114 வருவாய் (நி.மு.5(1) துறை 28.02.2011).

நிலமதிப்பு நிர்ணயம் வழிகாட்டி மதிப்பு அடிப்படையில் மேற்கொள்ளலாம். சம்பந்தப்பட்ட துறை பெயரில் நிலமாற்றம் செய்யலாம். கல் கிரயம் வசூலிக்கத்தேவையில்லை.

அரசு ஆணை(நிலை) 136 வருவாய் நிமு.5(2) துறை நாள்:25.04.2017

நிலமதிப்பு நிர்ணய நாள் :-

வணிக நோக்கமுள்ள இனங்களில் நில உரிமை மாற்றம் செய்யும் நாளில் நிலவும் சந்தை மதிப்பு (or) வழிகாட்டி மதிப்பு இவற்றில் எது அதிகமோ அதனை நில உரிமை மாற்ற புலத்திற்கான நிலக்கிரயமாக வசூலித்துக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்யலாம்.

(அரசாணை (நிலை) 618 வருவாய் (நி.மு.7) துறை 24.11.2010)

நில உரிமை மாற்றம்

தனிநபர், நிலையம் மற்றும் தல ஆட்சித் கழகத்திற்கு அரசினர் நிலத்தை கொடுத்தல் குறித்து இந்நிலை ஆணையில்

விவரிக்கப்பட்டுள்ளது. கம்பெனி, சங்கம் (or) அசோசியேஷன் முதலியவை விண்ணப்பம் செய்து கொள்ளும் முன் அவை பதிவு செய்திருக்க வேண்டும்.

R.S.O .24 (1) படி வருமான மில்லாத பொது உபயோகங்களுக்கு அரசினர் நிலம் நிலக்கிரயமின்றி கொடுத்து விடத்தக்கதாகும். நிலம் கொடுப்பதற்கு அதிகாரம் பெற்றவர் முன் நுழைவு அனுமதி R S.O.24 (2) படி வழங்கலாம்.

காலநீடிப்பு : பராதீனம் செய்யப்பட்ட நிலங்களைப் பொருத்து, எப்பயன்களுக்காக நிலம் விட்டுவைக்கபட்டனவோ அப்பயன்கள் நிறைவேற்றப் படுவதற்கு வேண்டிய நீடிப்புக் காலத்தை வழங்க வருவாய் வாரியத்திற்கு (நில நிருவாக ஆணையருக்கு) அதிகாரம் உள்ளது. [R.S.O .24 (7)]

நிலத்தீர்வை R.S.O .24 (8)

நிலத்தீர்வை விலக்களிக்கப்பட்ட நிலம், பாதைகள், மருத்துவ சாலை இடங்கள் மருந்தகம் இவைபோன்ற தல ஆட்சிக் கழகங்களுக்கு வருமானம் அளிக்காத இனங்களுக்கு நிலத் தீர்வை விலக்களிக்கப்படும். இத்தீர்வை விலக்கு நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் காலம் வரையிலும் இருக்கும். வருமானம் அளிக்கக் கூடிய சந்தைகள், வண்டிப் பேட்டைகள் இவை போன்றவை நிலத் தீர்வை செலுத்துவதற்குட்பட்டவை ஆகும். அதேபோன்று தல ஆட்சி or நகராட்சி பயணமாளிகை or மாளிகைச் சத்திரம், இவற்றிற்கு ஆதாயம் இருப்பதாகத் தெரியுமானால் அவற்றை அவ்வாறு உபயோகிக்கும் வரை தீர்வை விதிக்கப்படுவதற்குட்படும். அதேவேளை இந்நிறுவனங்கள் நடத்தும் பள்ளிக்கு தீர்வை விலக்கு அளிக்கப்படும்.

கொடை நிபந்தனைகள்

R.S.O .24 (6) -ல் குறிப்பிட்ட நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

22. குத்தகை
(ஆர்.எஸ்.ஓ. 24ஏ)

பதிவேடு

குத்தகைப் பதிவேடு (ரிஜிஸ்தர் - C) தாலுகா நடைமுறை நூல் பக்கம் 51-53 ல் கண்ட படிவத்தில் பராமரிக்கப்பட வேண்டும். மூன்று பிரிவுகளாக எழுதப்பட வேண்டும்.

i. நீண்ட காலக் குத்தகை (5 வருடத்திற்கு மேல்)
ii. குறுகிய காலக் குத்தகை (5 வருடத்திற்குள்)
iii. R.S.O. 24A. ன் கீழ் அளிக்கப்பட்ட நிலக்கொடை

விண்ணப்பம்: குத்தகைக்கான விண்ணப்பம், உறுதிமொழி மற்றும் நிபந்தனைப் படிவம் மற்றும் படிவ அறிக்கைகள் 122 முதல் 125 வரை கண்ட பக்கங்களில் உள்ளன.

குத்தகைக் காலம் :

குத்தகைக் காலம், பொதுவாக முதலில் 3 ஆண்டுகளாகும். விதிமுறைகளின்படி எந்த ஒரு அரசு நிலத்தையும் அதிகபட்சமாக 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கலாம். குத்தகைத் தொகை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அவ்வப்போது நிலவும் சந்தை மதப்பிற்கேற்ப திருத்தி அமைக்கப்படுகிறது. (அரசுக் கடித எண்.6469/நிமு 2(2) /2002 வருவாய்த் துறை நாள் : 27.4.2002).

சலுகை / பெயரளவு குத்தகை இனங்களில் அரசு அளவில் புதுப்பித்தல் வேண்டும். (GO.Ms 55 Rev 24.02.2017)

ஆண்டுக் குத்தகை

பயன்பாடு	குத்தகைக் கட்டணம்	தல வரி	தலமேல் வரி	மொத்தம்
வணிக நோக்கம்	2%	2%	10%	14%
வணிகமற்ற நோக்கம்	1%	1%	5%	7%

(அரசாணை (நிலை) 460 வருவாய் நாள் 4.6.98)

ஆணையிடும் அதிகாரம் (பண வரம்பில்)

அலுவலர்	பணவரம்பு
கலெக்டர்	ரூ. 10,00,000 வரை
C.L.A	ரூ. 25,00,000 வரை
Government	ரூ. 25,00,000 ற்கு மேல்

(G.O.Ms. 55 Revenue LD 2(1) Dept. Dt: 24.02.2017)

P.W.D. நிலங்கள் வருவாய்த் துறையின் அனுமதி பெற்ற பின்பு P.W.D.மூலம் குத்தகைக்கு விடப்படும். (பொ.ப.துறை நடைமுறை வதி 172(1))

உப்பளங்கள் - குத்தகை

i. குத்தகை ரூ. 5/- ஒரு ஏக்கருக்கு ஒரு ஆண்டிற்கு

ii. ராயல்ட்டி ரூ. 2/- உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு மெட்ரிக்டன் உப்பிற்கும் (குறைந்தது ரூ. 100/- ஒரு ஏக்கருக்கு ஒரு ஆண்டிற்கு)

(G.O.Ms. 242 Rev. 14.5.99)
G.O.M.S. 132 Rev. LD. VI (1) Dept. Dt. 15.03.2002.

குத்தகை காலம் மற்றும் பரப்பு :

உப்பு தயாரிக்கும் பொருட்டு 20 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்படுகின்றன. தனி நபருக்கு 6 ஹெக்டேர் நிலமும், கூட்டுறவு சங்கங்களுக்கு 40 ஹெக்டேர் நிலமும் வழங்கப்படுகின்றன.

இரால் பண்ணை--குத்தகை

இரால் பண்ணை அமைத்திட அரசு நிலங்களை குத்தகைக்கு விட அரசினற்கு அதிகாரம் உள்ளது. இயல்பான கருத்துருக்களுடன் கீழ் காணும் ஆவணங்களை இணைத்தனுப்பவேண்டும்:-

i) மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சான்று

ii) மீன் துறை உதவி இயக்குநரின் நிலத்தகுதி சான்று

iii) விவசாய நிலங்கள் பாதிக்கப்படாது என்பதற்கான மாவட்ட வேளாண் அதிகாரியின் N.O.C.

iv) நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ், நிலம் கோருபவரின், கையிருப்பு நிலங்கள் காணப்படுகிறதா என்பதற்கான சான்று (அரசானை (நிலை) 198 வருவாய் 17.2.1995)

ஆக்கிரமிப்பு வெளியேற்றம் [R.S.O.26]

ஆக்கிரமிப்பு, வெளியேற்றம் குறித்த வழிமுறைகள், R.S.O. 26 மற்றும் Revenue Acts and Regulations பக்கம் 185–ல் விவரிக்கப்பட்டுள்ளன.

ஸ்தலத்திற்கு தீர்வை மற்றும் அபராதம் விதிப்பதற்கு முன்பு ஆக்ரமிப்பு வெளியேற்றச் சட்டம் பிரிவு 5 பி யின் கீழ் நோட்டீசு வரி ஆய்வர் அல்லது வட்டாட்சியரால் கையொப்பமிட்டு ஆக்கிரமிப்புதாரருக்கு அனுப்பப்படும்.

இச்சட்டத்தின் 7 வது பிரிவின் கீழ் காரணம் கேட்டு அறிவிப்பு நோட்டீசை அனுப்ப வேண்டும். இதனை வரி ஆய்வர் கையொப்பமிட்டு அனுப்பலாம்.அதற்குப் பிறகும் காலி செய்து கொள்ளப்பட வில்லையென்றால் இச்சட்டத்தின் 6(1) பிரிவின்கீழ் ஒரு தேதி நிர்ணயிக்கப்பட்டு மேற்படி நாளுக்குள் அப்புறப்படுத்தப்படும் என்று அறிவிப்பு ஆணை பிறப்பிக்கப்படும். இதனை வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் கையொப்பம் செய்யலாம் (பி.ப்பி. Perm 843/E/78 நாள். 22.11.78)

மேற்படி 6 மற்றும் 7 பிரிவில் கண்ட நோட்டீசுகளின் மாதிரிப் படிவங்கள் ஆர்.எஸ்.ஓ. தொகுதி 1ல் முறையே 675 மற்றும் 677ம் பக்கங்களில் உள்ளன. அனுபோகத்தை அப்புறப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் ஆணை காலங்கடந்ததாக ஆவதில்லை. எந்தப் பசலியில் அது பிறப்பிக்கப்படுகிறதோ, அந்தப் பசலி முடிவு அடைந்த பின்னரும் அது நிறைவேற்றத்தக்கதாகும். உரிய முறையில் அறிவிப்பு சேர்க்கப்பட்ட பின்னர் ஓராண்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணை அதற்கடுத்து வரும் ஆண்டில் மேலும் அறிவிப்பு செய்யாமலே நிறைவேற்றப்படுவதற்குச் சட்ட முறையில் தடை ஒன்றும் இல்லை (ஆர்.எஸ்.ஓ.26.7) 1973 ம் வருடத்து தமிழ்நாடு அரசு ஊழியர் நன்னடத்தை விதிகள்7 (1ஏ) படி அரசுப் பணியாளர் எவரும் அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்ரமிப்பு, செய்யக் கூடாது. ஆக்கிரமிப்பு வெளியேற்றச் செலவுகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆக்கிரமிப்பு வெளியேற்றம் குறைந்த வழிமுறைகள் R.S.O, 26ல் விவரிக்கப்பட்டுள்ளன.

புல அளவுச் சுவடியில் காணப்படும் வாய்க்கால், வண்டிப் பாதை போன்ற விளக்கிகளில் (Details) ஆக்ரமணம் இருந்தால், ஆக்ரமிப்பு வெளியேற்றச் சட்டப்படி காலி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளாம் (பி.ப்பி (நிரந்தரம்) 1039(ஈ) நாள்.26.07.1966).

வருவாய்த் துறை புறம்போக்குகளைப் பொருந்து காலி செய்யும் ஆணை வட்டாட்சியருக்கு உள்ளது. வட்டாட்சியரின் ஆணையை எதிர்த்து R.D.O விடம் மேல்முறையிடு செய்யலாம்.

தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றும் சட்டம் 2007

P.W.D குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை பொ.து. அலுவலர் அறிவிப்பு அனுப்பிய 21 நாட்களுக்குள் அகற்றிக் கொள்ள வேண்டும். தவறினால் காவல்துறை உதவியுடன் அகற்றப்படும். மீண்டும் ஆக்கிரமிப்பு செய்தால் 3 மாத சிறை தண்டனை (or) Rs. 500/- அபராதம் (or) இரண்டும் விதிக்கப்படும்.

26. நிலம் - பரிவர்த்தனை
Exchange of Land (RSO 26A)

தனிப்பட்டவருக்குச் சொந்தமான நிலத்திற்குப் பதிலாக அரசினர் வசமுள்ள நிலத்தைக் கொடுத்தல்.

ஆறு, நீர்வழி, வண்டிப்பாதை முதலியன தனவழி மாறி தனிப்பட்டவரின் நிலத்தின் வழியாகச் செல்லுமானால், அவற்றின் உரிமையாளர் அந்நிலத்தின் உரிமையை விட்டுவிட்டு கணக்குளில் ஆறு முதலியவையாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலத்தின் பகுதியைப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு ஒப்புக்கொண்டாலும்.

கால்வாய் (or) பாதை செல்லும் வழியின் பாகத்தை நேராக்குவதற்காக (or) ஒரு சொந்த நிலத்தை இரண்டாகத் துண்டிக்கும சொந்தக் கால்வாய் (or) பாதையைப் பொதுமக்களின் வசதிக்குக குந்தகம் விளைவிக்காமல் அந்த சொந்த நிலத்தின் எல்லையை அனுசரித்தே திருப்பிவிட முடியுமானாலும்,

நீர்ப்பாசனத்திற்காக சிறுமேம்பாடுகள், சாவடிகள், கால்நடைப்பட்டிகள், கிணறுகள், (or) பள்ளிக்கூடங்கள் போன்றவற்றிற்கான பொது உபயோகங்களுக்காக 25 செண்டுகளுக்கு மேற்படாமல் தனிப்பட்டவர் நிலத்தின் சிறுபகுதிகள் தேவையாக இருப்பினும்,

தனிப்பட்டவர் கிராம நத்தங்களை விரிவுபடுத்துவதற்காகத் தமது நிலத்தை அரசினர் வசமுள்ள நிலத்திற்குப் பதிலாக பரிவர்த்தனை செய்து கொள்ள ஒப்புக்கொண்டாலும்.

தனிப்பட்டவர் தமது நிலப்பகுதிகளை ஒன்று சேர்த்துக் கொள்வதற்காக ஒவ்வொன்றிலும் 25 செண்டுகளுக்கு மேற்படாத சிறு நிலப்பகுதிகளின் உரிமை விட்டுவிட ஒப்புக்கொண்டாலும் - பரிவர்த்தனை செய்து கொள்ளலாம்.

பரிவர்த்தனை முறை:- தனிப்பட்டவர் தமக்குச் சொந்தமான நிலத்தின் உரிமையை விட்டு விடுவதும், அரசினர் வசமுள்ள நிலத்தை வழக்கமான நிபந்தனைகளை அனுசரித்து ஒப்படை செய்வதும்

பரிவர்த்தனை முறையாகும். நிலத்தின் உரிமையை விட்டுவிடுபவருக்கு அந்நிலத்தின் முழுஉரிமை இருக்க வேண்டும். நிலத்தின் உரிமையைப் பற்றி ஏதாவது சந்தேகமிருக்குமானால் வில்லங்கசான்று கேட்டுப்பார்க்க வேண்டும்.

ஒப்பளிப்பு அதிகாரம்:- அரசினர் வசமுள்ள நிலம் பரிவர்த்தனையில் கொடுக்கப்படும்போது அதன் மதிப்பு தனிப்பட்டவரின் உரிமை விட்டு விடும் நிலத்தின் மதிப்பிற்கு அதிகமாக இருப்பின், சம்பந்தப்பட்டவரிடமிருந்து அந்த வித்தியாசத் தொகையை தவறாமல் வசூலிக்க வேண்டும்.

பரிவர்த்தனை ஒப்பளிப்பளிப்பு

செய்யும் அலுவலர்	அதிகார வரம்பு
1. மாவட்ட ஆட்சியர்	- ரூ. 50,000/- வரை
2. C.L.A.	- ரூ. 1,00,000/- வரை
3. Govt.	- ரூ. 1,00,000/- ற்கு மேல்

(G.O.Ms. 179 Rev. 8.4.1999)

பரிவர்த்தனையை ரத்து செய்யும் அதிகாரம் :

பரிவர்த்தனைக்கு ஒப்பளிப்பு அளித்த அலுவலருக்கு அடுத்த உயர் அலுவலருக்கு உள்ளது.

பட்டா மாறுதல்
(R.S.O.31)

பட்டா மாறுதல்கள் கீழ்க்கண்ட நேர்வுகளில் செய்ய நேரிடும்

1. நிலச் சொந்தக்காரர்கள் தாமாகவே செய்யும் நடவடிக்கை
2. நீதிமன்ற தீர்ப்பிற்கிணங்க அல்லது வருவாய்த்துறை ஏலத்திற் கிணங்க மாற்றுதல்
3. வாரிசு (வழியுரிமை) முறையில் உரிமை மாற்றுதல்.

1. தாமாகவே மேற்கொள்ளும் நடவடிக்கை:-

அ). பதிவை மாற்ற வேண்டும் என்று கோரும் விண்ணப்பதாரர் மற்றும் கைப்பற்றுதாரர் ஆகிய இருவரும் கையொப்பம் இட்ட ஒரு விண்ணப்பத்தை வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

ஆ). பதிவு செய்யப்பட்ட அவணங்களின் மூலம் விற்றவர் மற்றும் வாங்கியவர் கையொப்பமிட்டு பதிவு மாற்றல் கோரலாம்.

2. நீதிமன்ற ஆணையின் கீழ் பதிவுமாறுதல்:-

குறிப்பிட்ட ஒருவர், ஒரு இடத்தின் உரிமையைப் பொருத்து நீதிமன்ற தீர்ப்பாணை பெற்றிருந்து அதன் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யக் கோரினால் பட்டா மாறுதல் செய்யலாம்.

3. வாரிசு முறையில் பதிவு மாறுதல்:-

கைப்பற்றுதாரர் இறந்து போனால் கிராமக் கணக்கு எண் 10(ஏ)-படி V.A.O அறிக்கைகை தயார் செய்து வாரிசுதாரர் மீது பட்டா மாறுதல் செய்ய வட்டாட்சியருக்கு பரிந்துரை செய்யலாம்.

சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வரப்பெறும் மனுக்களை வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டப்பதிவேடு 6-1-ல் பதிய வேண்டும் கைப்பற்றுதாரர்களிடமிருந்து நேரடியாக பெறப்படும் மனுக்களை வட்டக்கணக்கு 6-2-ல் பதிய வேண்டும்.

பட்டா மாறுதல் கோரிவரும் மனுக்களை அற்ப காரணங்கள் அதாவது பத்திரங்கள் கிடைக்கப்பெறவில்லை போன்ற காரணங்களைக் காட்டி நிராகரிக்கக் கூடாது. குறைகளை நிவர்த்தி செய்ய மனுதார்களுக்கு போதிய வாய்ப்பு அளித்து அப்படியும் போதுமான ஆவணங்கள் தாக்கல் செய்யாத நிலையில் மட்டுமே அவருடைய கோரிக்கை நிராகரிக்க வேண்டும்.

பட்டாமாறுதல் ஆணையை எதிர்த்து ஒரு மேல் முறையீடு R.D.O விடமும் மற்றும் ஒரு சீராய்வு மனு D.R.O விடமும் கொடுக்கலாம். D.R.O:வின் தீர்ப்பு இறுதியானது D.R.O-வின் ஆணையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் Writ வழக்கு தொடரலாம்.

36. நிலம் - உரிமை - விட்டு விடல்

Relinquishment (R.S.O. 33)

அரசுப்பொது நோக்கங்களுக்காக (பள்ளி, சத்துணவுக்கூடம் கட்டுதல் போன்றவை) கிராமத்தில் ஒரு நிலச்சுவான்தார். தனது பட்டா நிலத்தின் உரிமையை விட்டுக்கொடுத்தல் ஆகும். நிலச்சுவான்தார் யாதொரு நிபந்தனையுமின்றி உரிமையை விட்டுவிடுவதாக தெரிவிக்க வேண்டும். விண்ணப்பத்தில் கண்டவை சரியானவை என்பதற்கு V.A.O மனுவில் மேலொப்பம் செய்ய வேண்டும். நிலத்திற்குப் போகுவரத்து வசதி இருக்க வேண்டும். தனது பட்டாநிலங்களுக்கு நடுவில் உள்ள ஒரு நிலத்தின் உரிமையை விட்டுக்கொடுத்தால் அதை அனுமதிக்கலாகாது. மேலும் புன்செயில் 2 ஏக்கர்களுக்கும் நன்செயில் ஒரு ஏக்கருக்கும், குறைந்த பாகத்தில் உரிமையை விட்டுவிடுவதற்கு அனுமதிக்கலாகாது கூட்டுப் பட்டாவிலிருக்கும் நிலத்தின் உரிமையை, கூட்டுப்பங்குடைய ஒருவர் விட்டுவிடுவாரெனில், மற்றக் கூட்டுப்பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் இசைவு அன்றி அதை ஒப்புக்கொள்ளல் கூடாது. வட்டாட்சியர், நிலங்களின் உரிமையை விட்டுவிடுவதை ஒப்புக்கொள்ளலாம் (R.S.O. 33 - 7(i)) மேலும் அந்த பட்டா நிலத்திற்கான நிலவரியையும், அவர் தள்ளுபடி (write off) செய்ய ஆணை பிறப்பிக்கலாம். கிராமசாலைகள் (or) இதர வளர்ச்சித் திட்டங்களுக்காக நிலங்களின் உரிமை விடப்பட்டால் அவற்றை கொடையாக ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் ஒப்புக்கொள்ளலாம். இதன் பேரில் பிறப்பிக்கும் ஆணையை, கிராமக் கணக்குகளில் மாற்றம் செய்ய ஆணையர், வட்டாட்சியருக்கு அனுப்பிவைக்க வேண்டும் (R.S.O 33-7(ii).

இறு குறிப்புகள்

மாமூல் தரிசு மற்றும் சாகுபடி தரிசு நிலங்கள்

Mamul waste and cultivable waste Lands.

சாகுபடி செய்யக்கூடிய நிலத்தினை தொடர்ந்து (மாமூலாக) 3வருடங்களாக சாகுபடி செய்யாமல் தரிசாக விட்டால் அதற்கு மாமூல் தரிசு எனப்பெயர். (R.S.O 13 (17).

மண் அரிப்பு, நீர்பிடித்தல், மண் எக்கலடித்தல், புல்பூண்டு முளைத்திருப்பது போன்ற காரணங்களால் தொடர்ந்து 3 வருடங்களாக தரிசாக விடப்பட்ட நிலங்களுக்கு சாகுபடி தரிசு நிலங்கள் எனப்பெயர் (1959 ம் வருட நில அபிவிருத்திச் சட்டப்பிரிவு (Act 31061959)2(0)).

Escheat vs Uuclaimed Property

பேவாரிசு சொத்தும் உரிமை கோரப்படாத சொத்துக்களும்

வாரிசு அற்று அரசினரைச் சேரும் நிலம்மற்றும் சொத்துகளுக்கு பேவாரிசு (Escheats) என்ற பெயர்.

பொது இடங்களில் உரிமை கோரப்படாமல் (உரிமையாளர் யார் என்று தெரியாமல்) கிடக்கும் பொருட்களுக்கு உரிமை கோரப்படாத சொத்துக்கள் எனப்பெயர்.(R.S.O.197).

கிஸ்து பந்தி (Kist Bandi)

விவசாயிகள் நிலவரி முதலியவற்றை ஒட்டுமொத்தமாக ஒரே தவணையில் செலுத்த இயலாமல் துன்பப்படலாம். இதனால் ஏற்படக்கூடிய இடரைத் தவிர்க்க அவர்கள் செலுத்த வேண்டிய வரியை 4 மாத சுலபத் தவணைகளில் செலுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மற்றும் ஏப்ரல் மாதங்களில் இத்தொகை தவணை முறையில் வசூலிக்கப்படுகிறது. இம்மாதங்களில் வருவாய்த்துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட கிராமங்களில் முகாமிட்டு, விவசாயிகளிடம் வரி வசூலிக்கும் முறைக்கு கிஸ்துபந்தி என்று பெயர் (R.S.O.35)

துரவுக்கிணறு

துரவுக்கிணறு ஆறு, ஓடை கரைகளில் வெட்டப்படுகின்றன. இதன் ஆயக்கட்டு நிலங்கள் புஞ்சையாகக் கருதப்பட்டு, அதற்குரிய நிலவரிவிதிக்கப்படுகிறது.

துபசல்பயிர்(Duffasal crop)

துபசல் பயிர் 6 மாதங்களுக்குமேல் நீர்பாயக்கூடிய இருபசலிப்பயிர் ஆகும். வெற்றிலை, வாழை, மஞ்சள், கருணை, கரும்பு, மஞ்சள் முதலியவை இருபசலிப் பயிர்கள். ஒருபோக நஞ்சை நிலத்தில் இருபசலிப்பயிர் சாகுபடி செய்யப்பட்டால் சாதாரண தீர்வையைப் போல் 1 ½ மடங்கு தீர்வை வசூலிக்கப்பட்டது. (R.S.O.5A(2)).

பசலிஜாஸ்தி மற்றும் தீர்வை ஜாஸ்தி

ஒருபோக நஞ்சை நிலத்தில் இருபோகம் சாகுபடி செய்யப்பட்டால் அதற்கு பசலி ஜாஸ்தி எனப்பெயர்.

புறம்போக்கு மற்றம் புஞ்சைநிலத்தில் அரசு ஆதார நீரைப் பாய்ச்சி சாகுபடி செய்தால் அதற்கு தீர்வை ஜாஸ்தி எனப்பெயர். (R.S.O.5).

Waiver of Assesment and Remission of

Assesment (நிலவரி தள்ளி வைத்தல் மற்றும் தள்ளுபடி செய்தல்)

அரசு நிலங்களை அடமானம் செய்யும் பொழுது, அந்நிலங்களை சாகுபடிக்கு தகுதியானதாக்கிகொண்டு வர அடமானதாரருக்கு ஆரம்ப கால செலவுகள் பொதுவாக இருக்குமாதலால் இவ்வினங்களின் அடமானம் செய்யப்பட்ட நாளிலிருந்து முதல் 3 வருடங்களுக்கு அடமான நிலத்திற்கு நிலவரி கட்டத் தேவையில்லை. இதற்கு நிலவரி தள்ளிவைத்தல் எனப்படும் (R.S.O.15).

வறட்சி, புயல், வெள்ளம் காரணமாக பாசனத்திற்கு போதுமான தண்ணீர் கிடைக்காததால் நிலம் சாகுபடியின்றி தரிசாக விடப்பட்டால், அந்த பசலியில்

வசூலிக்கப்படவேண்டி ய நிலவரி தள்ளுபடி செய்யப்படும். (R.S.O. 13 & 14) இது நிலவரி தள்ளுபடி செய்தல் எனப்படும்.

Additional Assessment and Water Rate

கூடுதல் நிலவரி மற்றும் தண்ணீர் வரி)

நஞ்சை நிலங்களுக்கு அடிப்படை நிலத்தீர்வையுடன் கூடுதல் நிலத்தீர்வை விதிக்கப்பட்டது. முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு பாசன ஆயக்கட்டு நிலங்களுக்கு நில வரியில் 45%ம் இதரபாசன வகுப்பு நிலங்களுக்கு நிலவரியில் 30%ம் கூடுதல் நிலவரி விதிக்கப்பட்டது.

கண்மாய் நீர் கொண்டு புஞ்சைநிலங்களில் முறையற்ற பாசனம் மூலம் சாகுபடி செய்தல் அதற்கு. தண்ணீர் தீர்வை, அபராதத் தீர்வை விதிக்கப்பட்டது. கூடுதல் நிலவரி மற்றம் தண்ணீர் வரி விதிக்கும் முறை தற்போது நீக்கம் செய்யப்பட்டு விட்டது.

Baling Remission and Fixed Remission

இறவை வஜா & நிலையான வஜா

ஏற்றத்தின் (கவலை) மூலம் நீர் இறைத்து பாசனம் செய்யப்படும் ஆயக்கட்டு நிலங்களுக்கு வஜா செய்யப்படும் நிலவரிக்கு இறவை வஜா எனப்பெயர். பொதுவாக நிலவரியில் ¼ பங்கு வஜா செய்யப்படுவது உண்டு (R.S.O.5-5).

நிலஎடுப்புச் சட்டத்தின்கீழ் கையகப் படுத்தப்பட்ட நிலங்களுக்கான நிலத்தீர்வை நிலையாகத்தள்ளிக் கொடுக்கப்பட்டவை ஆகும். இதற்கு நிலையான வஜா எனப்படும்.

2C பட்டா (or) மரப்பட்டா

சொந்தக் குடியிருப்பு பகுதிகளை ஒட்டி, சொந்தமாக வளர்த்த பலன் தரும் மரங்களுக்கு, சம்பந்தப்பட்ட நபர். 2Cமரப்பட்டா பெற்றுக் கொள்ளலாம். 2Cமரப்பட்டா பெற ஊராட்சியின் ஒப்புதல் தீர்மானம் தேவை. 2Cமரப்பட்டா நிரந்தரப்பட்டா அல்ல மேம்பலனைமட்டும் அனுபவித்திக்கொள்ளும் உரிமை ஆகும். பெண்கள் பெயரில்தான் 2Cபட்டா வழங்கப்படவேண்டும். மா, பலா, புளி, தென்னை மற்றும் பனை ஆகிய 5 மரங்களுக்குமட்டும் மரப்பட்டா வழங்கப்படுகிறது. (R.S.O.18)

தடையாணைப்பத்தகம். (Prohittve Order Book)

இது ஒரு நிரந்தரப் பதிவேடு ஆகும். நீர்நிலை, மயானம், மேய்ச்சல் தரை போன்ற தடை விதிக்கப்பட்ட நிலங்கள், மேலும் அரசுக்குப் பிரத்தியேகமாகத் தேவைப்படும் புறம்போக்கு நிலங்கள், எதிர்காலத்தில் யாருக்கும் ஒப்படை செய்யக்கூடாது என்பதற்காகவும், ஆக்கிரமிப்பு அனுமதிக்கக்கூடாது என்பதற்காகவும் மாவட்ட ஆட்சியரால் ஆணைபிறப்பிக்கப்பட்டு தடை ஆணைப் புத்தகத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. மேலும், சில நிலங்களை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்தால் சட்டம் ஒழுங்கு மற்றும் சமூகப்பிரச்சனைகள் ஏற்படக்கூடும் என அறிய வந்தாலும் தடை ஆணை புத்தகத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. இந்நிலங்கள் பிற்காலங்களில் அரசு உபயோகத்திற்குத் தேவைப்பட்டால் அரசு/நில நிர்வாக ஆணையரின் முன் அனுமதி ஆணை பெற்று பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் (பத்தி 161.G.O.M)

கையேறு வரம் தாரர் மற்றும் மாட்டுவாரம் தாரர்

கையேறு வரம் தாரர் என்பவர், நிலச் சுவான்தாரரின் நிலங்களை உழ, ஏர் கலப்பையை வாரத்திற்குக் கொடுப்பவர், மற்றும் நிலத்தை உழுபவர் மேலும் நிலத்திற்கு நீர்பாய்ச்சுபவர் ஆகும். இருவருக்கு விளைச்சலில் ஒருபகுதி அல்லது அதற்கு இணையான தொகை, ஷ பணிகளுக்காக வழங்கப்படும்.

மாட்டுவாரம் தாரர் என்பவர் நிலச்சுவான்தாரரின் நிலங்களை உழ, உழவுமாடுகளை வாடகைக்குக் கொடுப்பவர் மற்றும் உழவுமாடுகளைக்கொண்டு வாரத்திற்கு உழுபவர். இவருக்கு ஒருபகுதி கூலியாக வழங்கப்படும்.

(1958-ம் வருட திருச்சிராப்பள்ளி கையேறுவாரம் தாரர் மற்றும் மாட்டுவாரம்தாரர் சட்டம்)

'பி' அறிக்கை 'B' Memo

இது கிராமத்தில் அரசு நிலங்களை தனிநபர் அனுமதியில்லாமல் அனுபவிப்பதைக் குறிகும் அறிக்கை ஆகும். இதனை VAO தயாரிப்பார். வருவாய் ஆய்வர் இந்த அறிக்கையின் பேரில் தலபார்வை செய்து தனது குறிப்புரையை அளிப்பார். அதன்பேரில் வட்டாட்சியரின் கருத்து மற்றும் உத்தரவு (சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பை அகற்றுவது (Or) அபாரதம் விதிப்பது குறித்து) வழங்கப்படும் 'பி' அறிக்கையின் மாதிரி படிவ அறிக்கை (PROFORMA) குடிமக்கள் நடைமுறை நூல் பக்கம் 31-ல் (VIII-ம் பிறசேர்க்கை) உள்ளது (மாதிரிப்படிவம் 5-ல் உள்ளது)

தடை ஆணைப் புத்தகம் (P.O.B)

(i) அரசு அலுவலக நடைமுறைநூல் (G.O.M) பத்தி : 161

(ii) (G.O.Ms. 63 Rev. 23.1.1995)

இது ஒரு நிலையான பதிவேடாகும். மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் தாலுகா அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டும். வருடம் ஒருமுறை மேற்கண்ட மூன்று அலுவலகப் பதிவேடுகளில் உள்ள பதிவுகளும் ஒத்திட்டு சரிபார்க்கப்பட்டு அதற்கான சான்று வழங்கப்பட வேண்டும்.

R.S.O .15(2) பத்தியின் கீழ் பொதுநலத் தேவைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள் , பெருங்கனிம (Major Minerals) நிலங்கள், புராதனச் சின்ன நிலங்கள் சட்டம் ஒழுங்கு தாவா தொடர்புடைய நிலங்கள் , நீர் நிலை, மயானம், மேய்ச்சல் மற்றும் மந்தைவெளி நிலங்கள், பூமிதான நிலங்கள் மற்றும் நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலங்கள் இவற்றை வேறு பயன்பாட்டிற்கு கொண்டு செல்லாமல் தடை செய்யும் வகையில் இப்புத்தகத்திற்குக் கொண்டு செல்லவேண்டும். மேலும் 'அ' பதிவேடு மற்றும் கிராம அடங்கல் குறிப்புரைக் கலத்திலும் தேவையான பதிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

தடை ஆணைப் புத்தப் பதிவிலிருந்து நீக்கம் செய்யலாம் என்ற நேர்வுகளில் , தடைசெய்யப்பட்ட நிலத்தின் மதிப்பு ரூ 5,00,000 க்குள் இருந்தால் அதற்கான ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் C.L.A - க்கு உண்டு. இந்தத் தொகைக்கு மேற்பட்ட நிலமதிப்பு இனங்களில் P.O.B யிலிருந்து நீக்கம் செய்ய G.O Ms 63 Rev நாள் 23. 1.1995 -படி அரசினற்கு அதிகாரம் உண்டு.

கவுல் (Cowle) (R.S.O.17)

அடர்ந்த காடு, சதுப்பு நிலங்கள், அடர்த்தியான புல் படர்ந்த நிலம் ஆகியவற்றை சீர் செய்வதற்கும் தழை உரத்திற்காக மரங்களையும் செடிகொடிகளையும் பயிர் செய்வதற்கும் குத்தகைக்கு கொடுக்கப்படும் நிலங்கள் கவுல் எனப்படும். 5 ஆண்டுகள் முதல் 12 ஆண்டு காலத்திற்குத் தீர்வையில்லாமல் கலெக்டர் நிண்டகால குத்தகைக்கு வழங்கலாம்.

கிராமப் புள்ளி விவரப் பதிவேடு

கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்படுகிறது. இதில் கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு, பயிரிடப்பட்ட பரப்பு, பல்வேறு வகைப் பயிர்களின் பயிரிடப்பட்ட பரப்பு, நன்செய் விவசாயம், மக்கள் தொகை ,கால்நடைகளின் எண்ணிக்கை , பல்வேறு வகைபுறம் போக்குகள் பரப்பு ஆகிய விவரங்கள் அனைத்தும் இதில் பதியப்பட்டிருக்கும். ஒரு கிராமத்தின் பொருளாதார நிலை விவசாய அபிவிருத்தி போன்ற விவரங்களை இப்பதிவேட்டின் பரிசீலனையிலிருந்து அறியலாம். (R.S.O 12 (15).

'ஏ' அறிக்கை 'A' Memo

இது அரசு நிலங்களை ஒப்படை செய்வதற்கான அறிக்கை ஆகும். விண்ணப்பதாரர் விவரம், நிலம் விவரம், நில வியல் நிலை, கிராமத்தில் விசாரணை செய்யப்பட்ட நாள் மற்றும் வட்டாட்சியர் ஆணை நாள் முதலிய விவரங்கள் அடங்கி இருக்கும். வட்டாட்சியர் ஆணை அடங்கிய 'ஏ' அறிக்கை V.A.O. விற்கு கிராமக் கணக்குகளில் தேவையான மாறுதல்கள் செய்ய அனுப்பி வைக்கப்படும். 'ஏ' அறிக்கையின் மாதிரி படிவ அறிக்கை (PROFORMA) குடிமக்கள் நடைமுறை நூல் பக்கம் 28ல் (VI ம் பிறசேர்க்கை) உள்ளது.

'பி' அறிக்கை 'B' Memo

இது கிராமத்தில் அரசு நிலங்களை தனிநபர் அனுமதியில்லாமல் அனுபவிப்பதைக் குறிக்கும் அறிக்கை ஆகும். இதனை V.A.O. தயாரிப்பார். வருவாய் ஆய்வர் இந்த அறிக்கையின் பேரில் தலபார்வை செய்து தனது குறிப்புரையை அளிப்பார். அதன்பேரில் வட்டாட்சியரின் கருத்து மற்றும் உத்தரவு (சம்மந்தப்பட்ட ஆக்கிரமிப்பை அகற்றுவது (or) அபராதம் விதிப்பது குறித்து) வழங்கப்படும். 'பி' அறிக்கையின் மாதிரி படிவ அறிக்கை (PROFORMA) குடிமக்கள் நடைமுறை நூல் பக்கம் 31-ல் (VIII-ம் பிறசேர்க்கை) உள்ளது.

பாலாஷ்
PALASH

பாசன மேம்பாட்டு வரி (BETTERMENT LEVY) (IRRIGATION CESS) (55)

திட்டப்பணி முடிந்த 2 ஆண்டுகளை கணித்து, பாசனத் திட்டங்களின் மதிப்பீடு 1.5 இடைத்திற்கு மேல் பட்டால் பாசன மேம்பாட்டு வரி விதிக்க R.D.O. விற்கு அதிகாரம் உள்ளது. பாசன மேம்பாட்டு வரி விதிப்பதற்கு முன் பாசனத் திட்டத்தின் தன்மை, தகராறு விவரம் ஆணையரால் நிர்ணயம் செய்ய முன் மொழிவுகள் அனுப்ப வேண்டும். பயன் பெறக் கூடிய விவசாயிகளின் புலன், தன்மை R.D.O. வால் மாவட்ட அளவில் பரிசீலனை செய்து அதன் மீது ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் கோரப்படும். அதன் பின் மேம்பாட்டு வரி நிர்ணயம் செய்து R.D.O. வால் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்படும். இதற்கு ஆட்சேபனை இருப்பின் மாவட்ட ஆட்சியரிடம் மேல் முறையீடு செய்து ஆணை கொள்ளலாம். மேம்பாட்டு வரி 20 ஆண்டுத் தவணை முறை, பயன் பெறும் ஆயக் கட்டு நிலத்தின் பரப்பளவு அடிப்படையில் வகுக்கப்படும். விவசாயிகளின் நிலத்தை ஈடாக வைத்து கடன் பெற்றுக் கொள்ளலாம். அரசாணை (நிலை) 547 வருவாய்த் [வ.நி 1(1)] துறை நாள்: 20.10.2010-ன் படி, பாசன மேம்பாட்டு வரி வசூல் செய்தல் முறை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

பயிர்காய்வு [AZMOISH]

பயிர்காய்வு விவரங்கள் அடங்கிய கணக்கின் பதிவு செய்யப்படுகின்றன. வருவாய் ஆய்வாளர் விவசாய நிலங்களின் மற்றும் புன் செய்யால் 25% க்குக் குறையாது பயிர்காய்வு செய்திருக்க வேண்டும். தணிக்கை பட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் நன் செய்யில் 20% ம் புன் செய்யில் 15% ம் மேற்பயிர்காய்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு சரகத்திலும் ஒரு கிராமத்திற்கு (OR) இரண்டு கிராமங்களில் R.D.O. மேற்பயிர்காய்வு செய்ய வேண்டும். பயிரின் நிலை, விவசாயிகளின் தன்னிச்சை விவரங்கள், வேளாண் பயிர்காய் வகை போகு ஆய்வு செய்யப்பட்டு, அடங்கல் கணக்கு முன் குறிப்புரைக் கலைத்தில், பயிர்காய் அலுவலரால் பதிவு செய்யப்பட வேண்டும். குலை, சம்பா இரு பருவ நிலைகளிலும் வருவாய் ஆய்வாளர் பயிர்காய் ஆய்வு செய்ய வேண்டும்.

2. நில எடுப்புச் சட்டம் 1894 (RSO 90)

(LAND ACQUISITION ACT 1894)

நோக்கம்

கிராம மனையிடங்கள், நகர, ஊரகத்திட்டங்கள், கல்வி, வீட்டுவசதி, சுகாதாரப்பணி மற்றும் அரசு அலுவலகங்கள் கட்டுதல் போன்ற பொது நோக்கங்களுக்காவும் (Public purpose) நிறுவனங்களுக்காகவும் (Companies) நிலம் கையகப்படுத்துதல் இச்சட்டத்தின் குறிக்கோளாகும் (பிரிவு 3 (f))

விண்ணப்பம்

சம்பந்தப்பட்ட துறை (or) நிறுவனம், கேட்பு விண்ணப்பத்தை உரிய படிவத்தில் (படிவம்: 1 இணைக்கப்பட்டுள்ளது) R.D.O. விற்கு நேரடியாக அனுப்ப வேண்டும்; அதன் நகல் கலெக்டருக்கு அனுப்பவேண்டும் (R.S.O.90-6)

பிரிவு 4 (1)- முதல் நிலை அறிவிக்கை :-

கேட்பு விண்ணப்பம் வரப்பெற்றவுடன், நில எடுப்பு அலுவலர் சம்பந்தப்பட்ட நிலங்களை கேட்புத் துறை அலுவலருடன் கூட்டாகப் பார்வையிட்டு 4(1) அறிவிக்கையை (படிவம் 2–(அ)- இணைக்கப்பட்டுள்ளது) கலெக்டர் அலுவலகம் மூலம் அரசுக்குப் பரிந்துரை செய்வார். நில எடுப்பு செய்யவிருக்கும் நிலங்களின் மொத்தமதிப்பு ரூ. 2 ½ இலட்சத்திற்குள் இருந்தால் வட்டாட்சியரும், ரூ. 7 ½ இலட்சம் வரை துணை ஆட்சியர் நிலை அலுவலரும், ரூ. 50/- இலட்சம் வரை D.R.O. / கலெக்டரும், அதற்குமேல் நில நிர்வாக ஆணையரும் நில எடுப்பு அலுவலராக செயல்படுவர். அறிக்கையை கீழ்கண்ட ஆவணங்களுடன் அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும்.

i. 4(1) அறிவிக்கை தமிழ்மற்றும் ஆங்கிலத்தில் தலா 9 நகல்கள்

பிரிவு 5 -A- ன் கீழான விசாரணை

4(1) அறிவிக்கைக்குப் பின், நிலமெடுப்பு தொடர்பான ஆட்சேபணை கோரிய ஒரு பொது அறிவிப்பு (படிவம் -3 இணைக்கப்பட்டுள்ளது) கிராமத்தில், தாலுகா அலுவலகம், நிலமெடுப்பு அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், கலெக்டர் அலுவலகத்தில் பிரசுரம் செய்யப்பட வேண்டும். மேலும் ஒரு தனி அறிவிப்பு சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் மற்றும் தொடர்புடைய வாரிசுதாரர்கள், குத்தகைதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். படிவம் 3-லான அறிவிப்பு நில உரிமையாளருக்கு சார்வு செய்த நாளுக்கும் 5 A – பிரிவிலான விசாரணை நாளுக்கும் இடைவெளி 15 நாட்கள் இருத்தல் வேண்டும். 5 A விசாரணையின் போது எழுப்பப்படும் ஆட்சேபணையின் பேரில், சம்பந்தப்பட துறையின் கருத்தைப் பெற்று, ஆட்சேபணை தாரருக்குத் தெரிவிக்க வேண்டும். விசாரணை மேற்கொண்டு நில உரிமையாளர் வாக்குமூலம் பெறப்பட வேண்டும்.

பிரிவு 6-ன் கீழ் வரைவுவிளம்பல்
(Draft Declaration U/S 6)

5A விசாரணையில், ஆட்சேபணை இல்லாத இனங்களில் பிரிவு 6-ன் கீழான வரைவு விளம்பல் அறிவிக்கையை (படிவம் 5-அ இணைக்கப்பட்டுள்ளது) நிலமெடுப்பு அலுவலர் அரசின் பார்வைக்கு நேரடியாக அனுப்பி வைப்பார். ஆட்சேபணை உள்ள இனங்களில் D.R.O. மற்றும் C.L.A. வழியாக இதற்கான கருத்துரு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். உரிய பரிசீலனைக்குப் பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்டால், அரசு அளவில் அந்த விளம்புகை (Draft Declaration) ஒப்புதல் செய்யப்பட்டு, மாநில அரசிதழில் ஆங்கிலத்தில் வெளியிடப்படும் (R.S.O. 90-7-ii) . மேலும் இரு தமிழ் நாளேடுகளில் விளம்பரம் செய்யப்படும், தவிர, விளம்புதலின் உட்கருத்து கொண்ட பொது அறிவிப்பு அப்பகுதியின் முக்கிய இடங்களில் தெரிவிக்கப்படவேண்டும். அரசுப் பொதுப்பயனுக்கு (or) கம்பெனிக்கு, இந்த விளம்புகை ஒரு அறுதிச் சான்றாகும் (Conclusive evidence)

1984-ம் வருட திருத்தச் சட்டப்படி, பிரிவு 6-ன் கீழான விளம்புகை, நிலஎடுப்பு தொடரப்பட்ட நாளிலிருந்து 315 நாட்களுக்குள்ளாக அனுப்பப்படவேண்டும். மேலும், இந்த விளம்புகை, இறுதியாக விளம்பரம் ஆன தேதியிலிருந்து 1 வருட காலத்திற்குள் பிரிவு 11-ன் கீழான தீர்ப்பு (Award) பிறப்பிக்கப்பட வேண்டும்.

பிரிவு 7-ன் கீழான வரைவுக் கட்டளை (Direction)

நில எடுப்பு அலுவலர் நேரடியாக அரசினற்கு பிரிவு 7-ன் படியான வரைவுக் கட்டளையை (Direction) அனுப்ப வேண்டும். அத்துடன் இணைந்த அறிக்கையில் பிரிவு- 6 விளம்பலின் சாராம்சம், கடைசியாக உள்ளூரில் பிரசுரமான தேதி விவரத்துடன் உட்கொண்டிருக்க வேண்டும். அரசால் ஒப்புதல் செய்யப்படும், வரைவுக் கட்டளை, தமிழ்நாடு அரசிதழில் மட்டும் பிரசுரம் செய்யப்படும்; வரைவுக் கட்டளை மாதிரிப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது. வரைவுக் கட்டளை பிரசுரத்தின் மூலம் தான் சம்பந்தப்பட்ட நிலமெடுப்பு அலுவலர், தீர்பபு விசாரணையை நடத்தவும், தீர்ப்பு வழங்கவும் அதிகாரம் பெறுகிறார்.

பிரிவு 9 மற்றும் 10-ன் கீழான அறிவிப்பு

பிரிவு 9(1) மற்றும் 10-ன் கீழான ஒரு அறிவிப்பை அரசு நிலம் எடுக்க உத்தேசித்துள்ளதையும், இழப்பீடு கோருவோர் விருப்பத்தையும் உள்ளடக்கி நில எடுப்பு அலுவலர் பிறப்பிப்பார். பிரிவு 9(3)-ன் கீழான அறிவிப்பு பிரத்தியேகமாக நில உரிமையாளர்களுக்கு சார்வு செய்யப்படும். இப்பிரிவுகளின் கீழான மாதிரிப்படிவங்கள் (படிவம் 6 மற்றும் 7) இணைக்கப்பட்டுள்ளன. 9(3) அறிவிப்பிற்கும் 'AWARD' விசாரணைக்கும் இடையே 15 நாள் கால இடைவெளி இருத்தல் வேண்டும்.

பிரிவு 11-ன் கீழான தீர்வளிப்பு (AWARD)

தீர்வளிப்பு விசாரணை முடிந்த 10 தினங்களுக்குள் பிரிவு 15 ஏ--ன் கீழான வரைவுத் தீர்ப்பு D.R.O. வால் ஒப்புதல் செய்யப்

பெற வேண்டும். D.R.O.–வின் ஒப்பதல் கிடைத்த 15 தினங்களுக்குள் தீர்வளிப்பு வழங்கப்பட வேண்டும். தீர்வளிப்பு (AWARD) ஆணை பிறப்பிக்க அதிகாரம் பெற்ற அலுவலர்கள்

வ.எண்.	அவார்டு ஆணை பிறப்பிக்கும் அலுவலர்	நிலத்தின் மதிப்பு
1	வட்டாட்சியர்/ தனி வட்டாட்சியர்	ரூ 2½ இலட்சத்திற்கு மிகாதவை
2	R.D.O/துணை ஆட்சியர் நிலை அலுவலர்கள்	ரூ. 7½ இலட்சம் வரை
3	D.R.O/Collector	ரூ. 50 இலட்சம் வரை
4	நில நிர்வாக ஆணையர்	ரூ.50 இலட்சத்திற்கு மேல்
(G.O.M.S.No 12 Rvenue L.A.1 (1) Dept dt: 7.1.2011)		

தீர்வளிப்பு மாதிரிப்படிவம் (படிவம்:8) இணைக்கப்பட்டுள்ளது.

இழப்பீட்டுத்தொகை நிர்ணயம் செய்தல் மற்றும் வழங்குதல்

i நடப்பு சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து அத்தொகை வழங்கப்படவேண்டும்

ii சந்தை மதிப்பில் 30% ஆறுதல் தொகை (Solatium) வழங்கப்படவேண்டும்.

iii சந்தை மதிப்பில் 12% கூடுதல் தொகை வழங்கப்படவேண்டும். இந்த 12% தொகை 4(1) அறிவிக்கை உள்ளூரில் பிரசுரமான நாளிலிருந்து, தீர்வளிப்பு வழங்கும் நாள் (or) நிலத்தை கைவசப்படுத்திய நாள், இதில் எந்தத்தேதி முந்தயதோ அந்தத் தேதிவரை வழங்கப்பட்வேண்டும். பொதுவாக

தீர்வளிப்பு அளிக்கப்பட்ட நாளுக்குப் பின்னரே நிலம் கைவசப் படுத்தப்படும் பிரிவு 17-ன் படி அவசரகால நில எடுப்பின்பொழுது மட்டுமே தீர்வளிப்பு அளிக்கும் முன் நிலம் கைவசப்படும்.

iv தீர்வளிப்பு வழங்கப்படுவதற்கு முன்னால் நிலம் கையகப்படுத்தியிருப்பின் நிலம் கையகப்படுத்திய நாளிலிருந்து தீர்ப்பளிக்க பட்ட தொகையின் மீது முதல் 1 வருடத்திற்கு 9% வட்டி வழங்கப்பட வேண்டும்.

v ஓராண்டு காலத்திற்குமேல் ஈட்டுத்தொகை அளிப்பதில் காலதாமதம் ஏற்பட்டால் 1 வருடம் கழிந்தபின். முழுத்தொகையும் டிபாசிட் செய்யப்படும் வரையில் 15% வட்டி கணக்கிட்டு கொடுக்கப்படவேண்டும்.

12% கூடுதல் தொகை கணக்கிடும்போது, லீப் வருடம் வந்தால், அதற்கு தனியாக 12% கூடுதல் தொகை கணக்கிட வேண்டும். உதாரணம்:- 4(1) பிரிவு அறிவிக்கை உள்ளூரில் பிரசுரமான தேதி 9.8.1991 : தீர்வளிப்பு வழங்கப்பட்ட தேதி 31.03.1994 எனவே 9.8.1991 முதல் 31.12.1991 வரை மற்றும் 1.1.1993 முதல் 31.3.1994 வரை உள்ள மொத்த நாட்கள்:

$$\frac{\text{நிலத்தின் மதிப்பு} \times 12 \times 600}{365 \text{ நாட்கள்}}$$

லீப் வருடத்திற்கு $\frac{(1.1.92 \text{ முதல் } 31.12.92 \text{ வரை})}{366 \text{ நாட்கள்}}$

$$\frac{\text{நிலத்தின் மதிப்பு} \times 12 \times 366}{366}$$

நில உரிமையாளர் தொகையை ஒப்புக் கொண்டால் ஆட்சேபணை இல்லையென அவரிடம் எழுதி வாங்க வேண்டும். ஏற்றுக் கொள்ளவில்லை யென்றால் அதற்கான காரணங்களை

எழுதி வாங்கவேண்டும். கேட்புத் துறையினரிடமிருந்து. வேண்டிய நிதி ஒதுக்கீட்டை பெற்ற பின்னரே தீர்வளிப்பு வழங்கப்பட வேண்டும். தீர்ப்பு வழங்கப்பட்ட பின் அதைத் திருத்தவோ (or) மாறுதல் செய்யவோ கூடாது. எழுத்துப் பிழைகள் இருந்தால் மட்டும் திருத்தலாம்.

தீர்வளிப்பு வழங்கிய 20 நாட்களுக்குள் ஈட்டுத் தொகையை அளிக்க வேண்டும் (or) நீதி மன்றத்தில் செலுத்திவிட வேண்டும்.

தீர்வளிப்பிற்குப் பிந்திய நடவடிக்கைகள்

12(2) பிரிவின் கீழ் அறிவிப்பு :

i. 5 தினங்களுக்குள் தீர்ப்பாணைப்படி நஷ்ட ஈட்டுத்தொகை பெற்றுக் கொள்ளக்கோரி நில உடமையாளருக்கு அறிவிப்பினை (மாதிரிப் படிவம் 9 இணைக்கப்பட்டுள்ளது) தீர்வளிப்பு நாளன்றே அனுப்ப வேண்டும்.

ii. பிரிவு 18-ன் கீழ் வழக்கு மன்றத்திற்குத் தகவல்:
தீர்வளிப்பு வழங்கப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குள் நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பப்படவேண்டும். தீர்வளிப்பு வழங்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் நில எடுப்பு செய்த நிலங்கள் பற்றிய விவரத்தை, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

iii தீர்வளிப்பு பெற்றோருக்கு காசோலை வழங்குதல்:

பிரிவு 12(2) அறிவிப்பு அனுப்பப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களுக்குள் காசோலை வழங்கப்படவேண்டும்.

iv மாநிலக் கணக்காயருக்கு 'A' மற்றும் 'AA' பட்டியல் அனுப்புதல் :

காசோலை வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நில உடமைதாரர்களிடமிருந்து பெற்ற பற்றுச் சீட்டை அனுப்பி வைக்கவேண்டும்.

v **நிலம் உடமையிலெடுத்தல்:-** தீர்வளிப்பிற்குப்பிறகு நில எடுப்பு அலுவலர் நிலத்தை உடமையில் எடுக்கலாம். அந்நிலம் அதன்பிறகு எந்தவித வில்லங்கமுமின்றி முழுவதுமாக அரசினரைச் சேரும் (பி-16)

vi **கேட்புத்துறைக்கு நிலங்களை ஒப்படைத்தல்:**

நிலத்தின் சுவாதீனத்தை எடுத்துக்கொள்ளுமாறு துணை அலுவலருக்கு படிவம்-11-ல் (இணைக்கப்பட்டுள்ளது) தகவல் தெரிவித்து பிறகு, 10 நாட்கள் கழித்து கேட்புத்துறையினரிடம் வட்டாட்சியர் மூலம் நிலங்களை ஒப்படைத்து, அதற்கான ஒப்புதலைப் பெறவேண்டும்.

vii **கிராமக் கணக்குகளில் மாற்றங்கள் செய்தல்:**

15 நாட்களுக்குள் வட்டாட்சியரால் கணக்குகளில் தேவையான மாற்றங்கள் செய்து அறிக்கை அனுப்பவேண்டும்.

viii **நில அளவைச்சட்டப்பிரிவு 13 விளம்பரம்:**

1923 ம் வருட நில அளவைச்சட்டப்பரிவு 13-ன் கீழ் விளம்பரத்தை கிராமத்திலும் அரசிதழிலும் பிரசுரித்தல். தீர்வளிப்பு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து 172 நாட்களுக்குள் தீர்ப்புக்குப் பின்னதான அனைத்து செயல்களும் முற்றுப்பெற வேண்டும். மற்றும் இறுதித்தணிக்கைக் குறிப்பை (Final check memo) D.R.O. விற்கு அனுப்ப வேண்டும்.

பிரிவு 16A ன் கீழான சொத்துரிமை மாற்றத்திற்கு கட்டுப்பாடு: அரசினரைத் தவிர மற்றபடி எந்த நிறுவனத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டதோ, அந்த அதிகார அமைப்பு அரசின் முன் அனுமதியின்றி, அந்நிலத்தை விற்பனை, அடமானம், குத்தகைக்கு விட இயலாது. இதற்கு மாறாக நிறுவனம் செயல்பட்டால் அந்நிலம் பறிமுதல் செய்யப்பட்டு வருவாய்த் துறையைச் சாரும். அதே போன்று குறிப்பிட்ட நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலம், அந்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படவில்லை என அரசு உள நிறைவு கொண்டால், அந்நிலத்தை வருவாய்த் துறையில் பறிமுதல் செய்யலாம் (பிரிவு 16-B).

காலதாமதமின்றி தாக்கல் செய்யவேண்டும். தாக்கல் செய்வதற்கான காலக்கொடு, அச்சிட்ட தீர்ப்புநகல் பெற்றதிலிருந்து 90 நாட்கள்.

நிறைவேற்றல்மனு (E.P):

சார்பு நீதிமன்றத்தினால் இழப்பீட்டுத் தொகை அதிகரித்து வழங்கிய இனங்களில், நிறைவேற்றுகை மனுவை நிறுத்திவைக்க உயர் நீதிமன்றத்தின் தடை ஆணை பெறவேண்டும். மேலும் இழப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து விரைவில் பெற்று நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும். நில உடமைதாரருக்கு உடனடியாக தொகையை வழங்கப்படாதிருக்க உயர்நீதிமன்றத்தில் தடை ஆணையும் பெறவேண்டும். (CLA சுற்றறிக்கை HI/41019/93 நாள்3.3.1993

முக்கிய அரசாணைகள்:

i. நன்செய் நிலங்களை கையகப்படுத்த அரசின் முன் ஒப்புதல் பெறவேண்டும்.(அரசின் கடித எண்.48687/சி1/80-4 வருவாய் நாள் : 12.03.1981)

ii. நிறுவனங்களுக்கு (Companies) நிலம் கையகப்படுத்த பிரிவு 17(1)-ன் கீழான அவசர நேர்வுகளை பயன்படுத்தக்கூடாது (G.O.Ms 686 Revenue dt: 22.8.1984)

iii. Where an appeal has been preferred by Govt against orders of SubCourt, a person interested shall not be entitled to withdraw the compensation deposited in the court awarded in excess of amount by the Collecter till the disposal of appeal in the High Court (Govt. Lr. No. 39284/LA-I (1)/o6.35 Revnue Dept. dt. 2.12.2010)

iv. ஆதி திராவிட இடுகாடுகளுக்கு இணைப்பு சாலைகள் போடுவதற்காக வேறு பொருத்தமான நிலங்கள் கிடைக்காத நிலையில் தேவைக்குரிய நஞ்சை நிலத்தை கையகப்படுத்துவதற்கு கலெக்டர் அரசின் முன் அனுமதி பெறத் தேவையில்லை. (அரசாணை (பல்வகை) 395 வருவாய்த்துறை 23.6.94)

4. 2001-ம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம்
[The Tamil Nadu High Ways Act, 2001]

—×—

நோக்கம்:- பாலங்கள், மேம்பாலங்கள், மதகுகள், கடப்பு வழிகள் மற்றும் பிற கட்டமைப்புகள் கூட.

நோக்கங்கள்:-
i. மேம்பாலம் அமைக்க அதிகபட்சமாக எந்த ஆக்கிரமிப்புகள் தேவை.
ii. நெடுஞ்சாலை D.E-யின் நிலைகொப்பு அட்டவணையுடன் கூடிய நோக்கங்கள்

நிலத்தை கையகப் படுத்துவதற்கான அதிகாரம்

